அறிவராய வெளியீடு-6

# யாப்பியல்

கொக்கூர்கிழான்

## கா.வை.இரத்தினசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29/12/82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவரசய வெளியீடு: (6)

# யாப்பியல்

(சுருக்கம்)

கொக்கூர்கிழான்

கா. வை. இரத்தினசிங்கம்

விலை ரூபா 10.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு டிசம்பர் 1982

உரிமை ஆசிரியருக்கே

அறிவரசு வெளியீடு (6)

அச்சுப் பதிப்பு :

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு - 12.

வெளியிட்டோர்: அறிவரசம்,
செய்யகம்,
கொக்குவில்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

(அறுசீர் விருத்தம்)

பொன்பொருள் நாடான் மேலாம்
புகழதும் மேவான் என்றும்
தன்னலம் கருதான் இன்பத்
தமிழினை நாடி நாளும்
இன்புறும் இசுலா மிய்யன்
இல்லறம் தவிர்த்த நல்லான்
அன்பனிப் ராஹி முக்கே
அர்ப்பணிக் கின்றேன் இந்நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


அணிந்துரை க
முன்னுரை உ
என்னுரை ங

I. உறுப்பியல்

(அ) எழுத்து 1
(ஆ) அசை 2
(இ) சீர் 4
(ஈ) தளை 6
(உ) அடி 10
(ஊ) தொடை 12
(எ) ஓசை 22

II. செய்யுளியல் 24

(அ) பாவியல்
1. வெண்பா 26
2. ஆசிரியப்பா 29
3. கலிப்பா 32
4. வஞ்சிப்பா 35

(ஆ) பாவினவியல்
1. தாழிசை 38
2. துறை 40
3. விருத்தம் 42

(இ) கும்மி 46
(ஈ) சிந்து 48
(உ) குறும்பா 49

III. உசாத்துணை நூல்கள் 51


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

(நேரிசை யாசிரியப்பா)

எழுத்துஞ் சொல்லும் பொருளுந் தேர்ந்தோர்
விழுப்பத் துணர்வை விரும்பிய பாவினில்
யாத்தற் குதவும் யாப்பி லிலக்கணம்
மூத்தோர் செய்த முறைமையி லதனைத்
தெள்ளிதில் மாண்பினர் தெரிந்திடற் கென்றே
விள்ளும் இரத்தின சிங்கமென் வித்தகன்
புதுமுறைக் கவிதை பொழிந்திடுங் கவிஞர்
எதுமுறை யெனநவில் இந்நூல் கற்றுத்
தமிழ்மொழிப் பாவகை தரினது தாய்க்கு
அமிழ்தினை யூட்டும் அருவினை யாகும்
அணியுட னைந்து மறிந்தவர்
மணியென விளங்குவர் வண்டமிழ்ப் புலத்தே.

புலவர்மணி
அல்ஹாஜ் A. M. ஷரிபுத்தீன் J. P.,
Rd. C. E. O.

பெரியநீலாவணை
கல்முனை
17 - 11 - 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எதற்குமோர் இலக்கணம் இருப்பதுபோலக் கவிதைக்கும் ஓர் இலக்கணம் உண்டு அதனையே யாப்பிலக்கணம் என்பர். யாப்பு, கவி, பாட்டு, செய்யுள் என்பன ஒரு பொருட் சொற்கள். சிறந்த புலவர்களால் ஓசையுடைய சொல் கொண்டு விழுமிய பொருள் பயக்குமாறு அழகுறச் செய்யப் பெறுவது செய்யுள். ஓசை நயம், சொல் நயம், பொருள் நயம் கவிந்திருக்கச் செய்வதால் கவிதை என்றாயிற்று என்பர். கவி என்பது வடசொல். கவியிலக்கணத்தை வட நூலார் ஆனந்தரியம் என்பர். ஆங்கிலத்தில் இதனை புரோசொடி (Prosody) என்பர்.

பாவகைகளையும் பெருவழக்காயுள்ள பாவினங்களையுமே இங்குக் கூறியுள்ளார். மேற்கொண்டு ஆழ்ந்து கற்க விழைவோர் யாப்பிலக்கண நூல்களைப் பயின்று தெளிந்து கொள்க. செய்யுளிலக்கணம் தெரிந்து கொண்டால் செய்யுளியற்றவும் செய்யுள்களை நன்கு புரிந்து கொள்ளவும் முடியும்.

தமிழ்ச் செய்யுள் மரபு அறியாதார் தமிழிலக்கிய மரபு தேராதார் செய்யுளுக்கு இலக்கணம் எதற்கு என்கின்றனர். இலக்கியத்துக்கு மட்டுமன்றி வாழ்க்கைக்கே இலக்கணம் வகுத்தவர்கள் தமிழர்கள். வேறெம்மொழிக்கும் இல்லாத சிறப்பு தமிழுக்கு உண்டெனில் அதன் பொருளிலக்கணமே காரணம் எனில் மிகையன்று.

செய்யுளிலக்கணத்தை எளிதிற் கற்று நல்ல செய்யுள்களை இயற்றித் தமிழ்வளம் பெருக்க தமிழிளைஞர் முன் வரல் வேண்டும். அதற்குத் தூண்டுகோலாக இந்நூற் சுருக்கம் இருந்து பெரும் பயன் நல்க வேண்டும் என்பதே என் வேணவா.

சைவப் புலவர் இ. வி. சுப்பிரமணியம்
(தினகரன் பிரதம உதவி ஆசிரியர்)

லேக் ஹவுஸ்,
கொழும்பு.
15 - 10 - 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

ஏறத்தாழ மூன்றாண்டுகட்குமுன் மூதூரன் என்ற புனைபெயரில் தினகரன் வாரமஞ்சரியில் என்னால் எழுதப் பெற்ற இருபது தொடர்கட்டுரையின் தொகுப்பே இந்நூல்.

இதனை எழுதுதற்கு எனக்கு ஊக்கமளித்த என் இனிய நண்பரும் சைவப்புலவரும் தினகரன் பிரதம உதவி ஆசிரியருமாகிய இ. வி. சுப்பிரமணியத்திற்கும் இக்கட்டுரைகளை நூலுருவில் கொணர்தற்கு இசைவளித்த தினகரன் பிரதம ஆசிரியரும் சட்டத்தரணியுமான திரு. ஆர். சிவகுருநாதன் B. A., L L B அவர்கட்கும், எழுத்துதவிகள் புரிந்த ஜனாப் ஏ. எச். சித்தீக் காரியப்பர், திரு. வி. ஜெகதீசன் ஆகியோருக்கும், எனது உளங்கனிந்த நன்றி.

பலரின் வேண்டுகோட்கிணங்க வெளிவரும் இந்நூல் யாப்பிலக்கணங் கற்க முற்படும் இளங்கவிஞர்க்கு அரியதொரு வழிகாட்டி. யாப்பியல் பற்றி எதுவுமே அறியாதாரும் ஓரளவு அறிந்தவரும் குறுகிய காலத்தில் விளக்கமாக யாப்பியல் பற்றி அறிந்து கொள்ள உதவும் கையடக்கமான விளக்க நூல் எனில் மிகையாகாது.

இந்நூல் வெளியிடற்கு வேண்டும் பொருள்தந்த
அன்பன் தனது பெயரதனை — என்றும்
வெளியிடவே வேண்டா எனக்கேட்டான் வண்மைக்
கழகாம் அதுவன்றோ காண்.

கொக்கூர்கிழான்
**கா. வை. இரத்தினசிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுப்பியல் 1 - எழுத்து

கவிதை, பாட்டு, செய்யுள், யாப்பு, தூக்கு என்பன ஒரு பொருட்சொற்கள். இவற்றை யாத்தற்கான விதி முறைகளை யாப்பிலக்கணம் என்பர். எந்தச் செய்யுளுக்கும் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை இருத்தல் இன்றியமையாதது. இவை செய்யுள் உறுப்புக்கள் எனப்பெறும். இவை இழுக்கி நடப்பின் செய்யுள் குற்றமுடையதாகும்.

"எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கொடு
இழுக்கா நடப்பது யாப்பெனப் படுமே"

என்பது யாப்பருங்கலம். எனவே யாப்புக்கு வேண்டும் இவ்வுறுப்புக்கள் பற்றித் தெரிந்து கொள்ளல் மிகமிக இன்றியமையாததே.

யாப்பிலக்கணமும் உறுப்பிலக்கணம் செய்யுளிலக்கணம் என இருவகைபெறும்.

எல்லாச் செய்யுட்களுக்கும் பொதுவான உறுப்புக்கள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பர். எழுத்தால் ஆவது அசை அசையினுல் ஆவது சீர், சீரினுல் ஆவது தளை. தளையினுல் ஆவது தொடை, இவ்வுறுப்புக்களுள் முதற்கண்ணதாகிய எழுத்தினைப் பற்றிப் பார்ப்போம்.

தமிழிலுள்ள 247 எழுத்துக்களும் யாப்பிலக்கணத்தில் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பெற்றுள்ளன. அவை குறில், நெடில், ஒற்று என்பன. அ, இ, உ, எ, ஒ ஆகிய உயிர்க்குறில் 5. இவ்வைந்தும் தனித்தனியே க் முதல் ன் ஈழுன 18 மெய்களுடனும் கூடும்போது 90 உயிர்மெய்க் குறில்கள் ஆகின்றன. உயிர் நெடில்கள் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என 7 எழுத்துக்கள். இவை தனித்தனியே மேற்கூறிய 18 மெய்களுடனும் கூடிவரும்போது உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய் நெடில்கள் 120 ஆகின்றன. 18 மெய்யுடன் ஆய்த முஞ் சேர ஒற்றெழுத்துக்கள் 19 ஆகின்றன. இவைகளின் கூட்டுத்தொகையே 247 ஆகும்.

யாப்பிலக்கணத்தில் ஒற்றெழுத்துக்களுக்கு மதிப்பில்லை என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். எழுத்து பற்றி இப்போதைக்கு இவ்வளவு அறிந்திருந்தாற் போதும். அடுத்து அசைபற்றிக் கவனிப்போம்.

# உறுப்பியல் 2 - அசை

எழுத்தினால் ஆகும் அசை சீருக்கு உறுப்பாகும். அசை முன்னர்க்கூறிய குறில், நெடில், ஒற்று ஆகிய மூன்றினாலும் ஆவது. அது நேரசை நிரையசை என இருவகை பெறும்.

"நேரசை என்று நிரையசை என்று
ஆயிரண் டாகி அடங்குமன் அசையே"

என்பது யாப்பருங்கலம். நேரசை, நிரையசை முறையே தனியசை, இணையசை என்றும் அழைக்கப்பெறும்.

"தனியசை என்று இணையசை என்று
இரண்டென மொழிமனார் இயல்புணர்ந் தோரே"

எனும் காக்கை பாடினியம் இதனை வலியுறுத்தும்.

குறிலேனும் நெடிலேனும் தனித்தேனும் ஒற்றடுத் தேனும் வரின் நேரசையாம். இந்நேரசை நால் வகை பெறும்.

"நெடில்குறில் தனியாய் நின்றும் ஒற்றடுத்தும்
நடைபெறும் நேரசை நால்வகை யானே"

எனும் யாப்பருங்கலம் இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

நேரசை நான்காவது:-

அ — குறில் தனித்தது
அம் — குறில் ஒற்றடுத்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ — நெடில் தனித்தது
ஆம் — நெடில் ஒற்றடுத்தது

குறில் இணைந்தேனும் குறில் நெடில் இணைந்தேனும் ஒற்றடுத்தேனும் வரின் நிரையசை.

"குறிலிணை குறில்நெடில் தனித்தும் ஒற்றடுத்தும்
நெறிமையின் நான்காய் வருநிரை யசையே"

என்பது யாப்பருங்கலம். நேரசை நான்காவது போலவே நிரையசையும் நான்காகும்.

நிரையசை நான்காவது:-

கட — குறிலிணை தனித்தது
கடம் — குறிலிணை ஒற்றடுத்தது
கடா — குறில் நெடில் தனித்தது
கடாம் — குறில்நெடில் ஒற்றடுத்தது

அசைகளின் வேறுபாட்டால் சீரும் வேறுபடும். எனவே தான் யாப்பிலக்கணத்தின் சிறப்பான அடிப்படை அசை எனப்பெற்றது. செய்யுட்கள் யாவுமே இந்த அடிப்படை உறுப்புக்களான ஈரசைகளைக் கொண்டே இயல்கின்றன. ஒற்றுக்களை அசை பிரிக்கும் போது கணக்கில் எடுப்பதில்லையாயினும் அவை அசையைப் பிரித்துவிடும் என்பதை அறிக. ஒற்று எழுத்துகள் எழுத்தாய் நின்று அலகு பெறா. ஆய்தமும் செய்யுளில் ஒற்றுகளை கருதப்பெறும் என்பதை மறவாதீர்கள். அசை பிரிக்கும்போது பொருள் பற்றிக் கருதாது ஒரு சீரிலுள்ள எழுத்துக்களை மட்டுமே அசை பிரித்தல் வேண்டும்.

ஐ, ஔ எனும் உயிர்களும் இவை ஏறிய உயிர்மெய்களும் நெடிலே எனினும் ஐகாரம் சீரின் இடையிலும் கடையிலும் குறிலாம். குறிப்பு, தற்சுட்டு, ஏவல், சுட்டு, விளி எனும் ஐந்திலும் விட்டிசை வருமென்பதை,

"குறிப்பு ஏவல் தற்சுட் டளபெழித்
தனிக்குறில் மொழிமுதல் தனியசை இலவே"

எனும் யாப்பருங்கல நூற்பா இதனை ஐயமறத் தெளிவிக்கின்றது. அடுத்து அசைபிறப்பால் ஆகும் சீரினைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுப்பியல் 3 - சீர்

அசையினுக்கு அடுத்ததாகக் கவிதையில் முக்கியத்துவம் பெறும் உறுப்பு சீர். சீர் எனில் தாளம். இச்சீர்களைக் கொண்டே பாக்களை வகைப்படுத்துவர். சீர் அமைப்புக்களினாலேயே அடிகளின் உருவம் அமைகிறது.

சீர்கள் தனித்துப் பொருள் தரின் சிறப்பு. அத்தகு சீர்களைச் சிறப்புடைச்சீர் என்பர்.

சீர்களைக் குறிப்பிடும்போது அச்சீர்களின் இறுதியைச் சுட்டும் பெயர்களாற் கூறுதல் வழக்கம்.

சீராவது இருவகை அசைகளும் (நேரசை நிரையசை) சிறுபான்மை தனித்தேனும் பெரும்பான்மை இரண்டு முதல் நான்குவரை தொடர்ந்தேனும் ஓரடியில் சீராகுத்து நிற்கும் அசை அல்லது அசைக்கூட்டமாகும். அச்சீர் அசைச்சீர் இயற்சீர் உரிச்சீர் பொதுச்சீர் என நால்வகை பெறும். இந் நால்வகைச் சீர்களிலும் இயற்சீரும் உரிச்சீருமே மிகுதியாகச் செய்யுள்களில் வரும். அசைகள் இரண்டின் பல்வகைச் சேர்க்கையினால் ஆகும். இச்சீர்களில் ஓரசைச்சீர் வெண்பாவின் இறுதியிலேயே பெரும்பாலும் வரும். ஓரசையினால் ஆகும் சீர் அசைச்சீர் எனப்பெயர்பெறும். ஓரசைச்சீர் நேர், நிரை என்பனவாம். இவ்விரு அசைகளும் சீராக மாறும்போது முறையே நாள், மலர் எனும் வாய்பாடு பெறும்.

வெண்பாவின் ஈற்றில் நாள், மலர் எனும் அசைச்சீரேயன்றி காசு, பிறப்பு எனும் வாய்பாட்டுச்சீர்களும் வரும். இவை முறையே நேர்பு நிரைபு எனப்பெறும். இவற்றை நேரசையுகரம் நிரையசையுகரம் என அழைப்பர். உகரம் பெரும்பாலும் குற்றுகரமாகவே வருமெனினும் சிறுபான்மை முற்றுகரமாகவும் வரும்.

**அசைச்சீர்களாவன:-**

நேர் — நாள்
நிரை — மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்பு— காசு
நிரைபு—பிறப்பு

அடுத்து ஈரசைச்சீரைப் பார்ப்போம்.

இரண்டு அசைகளைக் கொண்டது ஈரசைச்சீர். இதனை இயற்சீர் எனவும் அழைப்பர். இது நான்கு வகைபெறும். இது அகவற்கே உரியதாதலின் அகவற் சீர் எனவும் ஆசிரியச்சீர் எனவும் வழங்கப்பெறும். அக வல் எனினும் ஆசிரியம் எனினும் ஒன்றே.

"இயற்சீர் எல்லாம் ஆசிரிய உரிச்சீர்"

என காக்கைபாடினியமும்

"ஈரசை நாற்சீர் அகவற்குரிய"

என யாப்பருங்கலமும் கூறுகின்றன.

ஈரசைச்சீர் நான்காவன:-

| அசைவாய்பாடு | சீர் வாய்பாடு |
|---|---|
| நேர் நேர் | தேமா |
| நிரை நேர் | புளிமா |
| நிரை நிரை | கருவிளம் |
| நேர் நிரை | கூவிளம் |

மா என முடியும் சீர்களை மாச்சீர் எனவும் விளம் என முடியும் சீர்களை விளச்சீர் எனவும் கூறுவர்.

மூவசையாலாவது உரிச்சீர் எனப்பெறும். இது எட்டு வகை பெறும். அவையாவன:-

| அசைவாய்பாடு | சீர்வாய்பாடு |
|---|---|
| நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| நேர் நிரை நேர் | கூவிளங்காய் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நேர் நேர் நிரை | தேமாங்கனி |
| நிரை நேர் நிரை | புளிமாங்கனி |
| நிரை நிரை நிரை | கருவிளங்கனி |
| நேர் நிரை நிரை | கூவிளங்கனி |

காய் என முடியும் நான்கு சீர்களும் காய்ச்சீர் எனப்பெறும். இவை வெண்பாவுக்கே உரியனவாதலால் வெண்பாவுரிச்சீர் எனவும் வெண்சீர் எனவும் வழங்கப்பெறும்.

''கடைகாய் அடையின் வெண்பா விற்காம்''
என்பது யாப்பருங்கலக் காரிகை.

கனியென இறும் நான்கு சீர்களும் கனிச்சீர் எனப்பெறும். இவை வஞ்சிப்பாவுக்கே உரியனவாதலின் வஞ்சியுரிச்சீர் வஞ்சிச்சீர் எனும் பெயர்பெறும்.

''அந்தம் கனியா வகுத்தவஞ் சிக்குரிச்சீர்''
என்பது யாப்பருங்கலக்காரிகை.

நாலசையினாலாவது பொதுச்சீர் எனப்பெறும். இது பதினாறு வகைபெறும். இப்பதினாறில் பூ என முடியும் எட்டுச்சீரும் பூச்சீர் எனவும் நிழல் என முடியும் எட்டுச்சீரும் நிழற்சீரெனவும் வழங்கும்.

எந்தப் பாட்டினும் ஒரு சீருக்கு நான்கு அசைகளுக்கு மேல் வருவதில்லை.

நாலசைச்சீருடைய பாட்டும் பெருவழக்குப் பெறவில்லை. ஆதலால் நாலசைச்சீர் பற்றி இங்கு அதிகம் குறிப்பிடவில்லை. இது பற்றி அறிய விரும்புவோர் யாப்பிலக்கணங்களைப் படித்தறிக.

## உறுப்பியல் 4—தளை

நின்றசீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை ஒன்றியேனும் ஒன்றாதேனும் கூடி நிற்பது தளை யாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர் முன் நேரும் நிரைமுன் நிரையும் வருதல் ஒன்றி வருதலாகும். நேர்முன் நிரையும் நிரைமுன் நேரும் வருதல் ஒன்றாது வருதலாகும்.

"நின்ற சீர்நிற் றெடுவருஞ் சீர்முதல்
ஒன்றுதல் ஒன்றா தாகுதல் தளையே"

நின்றசீர் என்பது முதலிலுள்ள சீர். வருஞ்சீர் என்பது நின்ற சீரோடு வந்துசேருஞ்சீர் - கற்க கசடற எனும் போது கற்க நின்றசீர் கசடற வருஞ்சீர்.

தளை கொள்ளும் போது நின்றசீர் இன்னசீர் என்றும் வருஞ்சீரின் முதலசை இன்ன அசை என்றும் பார்த்தல் வேண்டும்.

கற்க — தேமா — மாச்சீர்
கசடற — நிரைநிரை மாமுன் நிரை வந்தது.

வருஞ்சீர் இன்னசீர் என்று பார்க்க வேண்டியதில்லை.

தளை — தளைதல் — கட்டுதல். இரண்டு சீர்களை ஒன்றாகக் கட்டுதல். இத்தளை ஏழு வகைபெறும்.

"சீரொடு சீர்தலைப் பெய்வது தளையவை
ஏழென மொழிப இயல்புணர்ந் தோரே"

எனும் யாப்பருங்கலம் இதனைத் தெளிவுபடக் கூறுகின்றது.

ஏழு தளைகளாவன :—

இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, கலித்தளை ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை.

இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இரண்டும் வெண்பாவுக்குரியனவாதலின் வெண்டளை எனப்பெறும் வெண்டளை இலக்கணம் தெரியாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா இயற்ற முடியாது. வெண்பாவுக்கு எது இல்லாது போனாலும் வெண்டளை இருந்தேயாக வேண்டும்.

மாமுன் நிரையும் விளமுன் நேரும் காய் முன் நேரும் வருவன வெண்டளையாம்.

மாமுன் நிரையும் விளமுன் நேரும் வருதல் இயற்சீர் வெண்டளை கற்க கசடற கற்பவை கற்றபின் எனும் போது

> கற்க கசடற - தேமா நிரை நிரை - மாமுன் நிரை
> கசடற கற்பவை - கருவிளம் நேர் நிரை - விளமுன் நேர்

நின்ற சீர் இயற்சீரானதால் இயற்சீர் வெண்டளை எனப்பெற்றது.

காய் முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை வெண் சீர் நின்று நேரசை முதல்வரும் சீருடன் சேர்தலால் வரும் தளை இது.

யாதானும் நாடாமல் - தேமாங்காய் நேர்நேர்நேர் — காய்முன் நேர்

> "வெண்சீர் ஒன்றலும் இயற்சீர் விகற்பமும்
> என்றிரண் டென்ப வெண்டளைக் கியல்பே"

எனும் யாப்பருங்கலத்தை நோக்குக.

இயற்சீர் வெண்டளையில் மாறி வருவது ஆசிரியத்தளை நின்ற சீர் ஆசிரியச்சீர் ஆனதால் ஆசிரியத்தளை எனப் பெற்றது. ஆசிரியத்தளை நேரொன்றாசிரியத்தளை நிரையொன்றாசிரியத்தளை என இருவகைபெறும்.

> "ஈரசைச் சீர்நின் றினிவரும் சீரொடு
> நேரசை ஒன்றல் நிரையசை ஒன்றலென்
> றுயிரு வகைத்தே ஆசிரி யத்தளை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமுன் நேர்வரின் நேரொன்றாசிரியத்தளை
போது சாந்தம் - தேமா நேர்நேர் - மாமுன்நேர்
விளமுன் நிரைவரின் நிரையொன்றாசிரியத்தளை
அணிநிழல் அசோகு--கருவிளம் நிரைநேர்--விளமுன் நிரை

காய்முன் நிரைவரின் கலித்தளை யாகும் இது வெண்சீர் வெண்டளைக்கு மாறானது.

விலங்குலகின் மணிமுதலே — கருவிளங்காய் நிரை நிரை நேர் காய் முன் நிரை காய்ச்சீர் நின்று வருஞ் சீருடன் ஒன்றுமையால் வரும் தளை இது. இதுஒரு வகையே.

"நிரையீ றில்லா உரிச்சீர் முன்னர்
நிரைவருங் காலைக் கலித்தளை யாகும்"

கனிமுன் நிரை வருதலும் கனிமுன் நேர் வருதலும் வஞ்சித்தளையாம் கனிச்சீர் நின்று நிரைமுதல் வருஞ் சீருடனுதல் நேர் முதல் வருஞ்சீருடனுதல் சேர்தலால் உளதாகும் தளை இது.

"தன்சீர் இறுதி நிரையொடு நேர்வரின்
வஞ்சித் தளையின் வகையிரண் டாகும்"

கனிச்சீர் நின்று நிரைமுதல் வருஞ்சீருடன் சேர்தலால் உண்டாம் தளை ஒன்றிய வஞ்சித்தளையாம்.

வரிசையில் புகழ் வயங்கு வெண்மீன் — கருவிளங்கனி நிரைநிரை நேர் கனிமுன் நிரையாதல் காண்க.

கனிச்சீர் நின்று வருஞ்சீருடன் ஒன்றுமையாகிய புணர்ச்சியால் ஆகும் தளை. கனிமுன் நேர் ஒன்றாத வஞ்சித்தளை.

"வான் பொய்ப்பினும் தான் பொய்யா"
தேமாங்கனி நேர்நேர்நேர்
கனிமுன் நேர் வந்தது காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பாவில் பிறதளை வருவது தளைதட்டுதல் எனப் பெறும். ஐகாரம் நெடிலேயாயினும் தளை தட்டுமிடத்துத் தனிக்குறில் போலாகும். தட்டாவிடத்து நெடிலாகும்.

சீர்களை அசைபிரித்து வாய்பாடு கண்டு தளை கொள்ளுதல் **அலகிடுதல்** எனப்பெறும்.

# உறுப்பியல் 5 - அடி

இரண்டு முதலிய சீர்களைக் கொண்டு முடிவது அடியாகும். அடி என்பது வேறு வரி என்பது வேறு. ஓரடியை இரண்டு முதலிய பல வரிகளாகவும் எழுதலாம். ஓரடிக்கு இரண்டு முதல் முப்பத்திரண்டு சீர்கள் வரைக்கும் வருவதுண்டு. சீர்களின் எண்ணிக்கையையொட்டி அடிகளுக்குப் பெயர்களிடப்பட்டுள்ளன. குறளடி சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என அடி ஐந்து வகைபெறும்.

"குறளடி சிந்தடி அளவடி நெடிலடி
கழிநெடி லடியெனக் கட்டுரைத்தனரே"

என்பது யாப்பருங்கலம்

இருசீரடி கொண்டு முடிவது குறளடியாகும். எடுத்துக்காட்டு "திரைத்த சாலிகை" ஏனையடிகள் எல்லாவற்றிலும் குறுமையுடையதாதலால் இது குறளடியெனப் பெயர் பெற்றது.

மூன்று சீர்கொண்டு முடிவது **சிந்தடி** எனப்பெறும். எடுத்துக் காட்டு "இருது வேற்றுமை இன்மையால்" குறளடியினும் சிறிது நெடியதாதலால் இது இப்பெயர் பெற்றது.

நான்கு சீர் கொண்டு முடிவது **அளவடி**யாகும். எடுத்துக்காட்டு: "தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா" **அளவடி நேரடி எனவும் பெறும்**. குறுமையும் நெடுமையும் இன்றி அளவுபட்டு நிற்றலால் அளவடி என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிற்று. பல பாக்களிலும் அளவடியே தலைமை பெற்றி ருத்தலால் நேரடி என இது பெயர் பெற்றது. நேர் - தலைமை.

ஐந்து சீர் கொண்டு முடிவது நெடிலடியென வழங் கப்பெறும். இது அளவடியினும் சிறிது நெடிதாதலால் இப்பெயர் பெற்றது. எடுத்துக்காட்டு:

"வென்றான் வினையின் தொகையாய் விரிந்து தன் கண்"

"குறளடி சிந்தடி இருசீர் முச்சீர்
அளவடி நெடிலடி நாற்சீர் ஐஞ்சீர்
நிரனிறை வகையால் நிறுத்தனர் கொளவே"

என யாப்பருங்கலமும்,

"இருசீர் குறளடி சிந்தடி முச்சீர்
அளவடி நாற்சீர் அறுசீ ரதனின்
இழிய நெடிலடி என்றிசி னோரே"

எனக் காக்கைபாடினியமும் கூறுவது காண்க.

ஐந்து சீர்களின் மிக்கு நிற்கும் அடிகளெலாம் கழிநெடிலடி எனப்பெறும்.

"கழிநெடி லடியே கசடறக் கிளப்பின்
அறுசீர் முதலா ஐயிரண் டீறா
வருவன பிறவும் வகுத்தனர் கொளவே"

எனும் யாப்பருங்கலம் இதனை வலியுறுத்துகிறது. கழி — மிகுதி கழிநெடில் — நெடிலினும் மிக்கது. எடுத்துக் காட்டு:

"இரைக்கும் ஐஞ்சிறைப் பறவைகள் எனப் பெயர் இனவண்டு புடைசூழ"

ஐந்து சீர்களுக்கு மேற்பட்ட எல்லாமே கழிநெடி லாதலால் அடியிலுள்ள சீர்களின் தொகைப் பெய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோடு சேர்ந்து அறுசீர்க் கழிநெடிலடி, எழுசீர்க்கழி நெடிலடி எனக் கழிநெடிலடிகள் பெயர் பெறும்.

அதிகமான சீர்களையுடைய அடிகளை ஆசிரிய விருத்தங்களிற் காணலாம். வள்ளலார் திருவடிப் புகழ்ச்சி எனும் பாடலை 192 சீர் விருத்தமாகப் பாடியுள்ளதாகக் கூறுவர்.

பன்னிருசீர், பதினான்குசீர், பதினறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களை இரட்டை விருத்தம் என்பர்.

மிகவும் குறைந்த அடிகளையுடையது குறள் வெண்பா அடுத்துக் குறைந்த சிறுமையுடையது. ஆசிரியப்பா மூன்றடி தான் கடை சிறுமை கொண்டது கலிப்பா. ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியவற்றுக்கு மேலெல்லையில்லை. கலிவெண்பாவுக்கும் மேலெல்லையில்லை. கலிவெண்பாவுக்குச் சிற்றெல்லை பதின் மூன்று அடியாகும். ஐந்தடியிலிருந்து பன்னிரண்டடிவரையுள்ள வெண்பா பஃறொடை வெண்பாவாகும்.

# உறுப்பியல் 6 - தொடை

தொடையென்று சொல்லப்படுவது அடியிரண்டியைந்தவழித் தோன்றுவதே.

"தொடையே அடியிரண் டியையத் தோன்றும்"

என்பது யாப்பருங்கலம். இத்தொடை ஓரடியிலுள்ள சீர்களிலும் வரும். செய்யுளின் இனிமைக்கும் ஓசை நயத்துக்கும் தொடை மிகமிக இன்றியமையாதது. தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் எனும் பழமொழி தொடையின் சிறப்பை உணர்த்துகின்றது.

தொடை முதற்றொடை, உறழ்ச்சித் தொடை என இரண்டு வகைபெறும்.

அடிகளில் வருவது முதற்றொடை எனப்பெறும். ஓரடியிலுள்ள சீர்களில் வருவது உறழ்ச்சித்தொடை எனப் பெறும். இவ்வுறழ்ச்சித்தொடை நாற்சீரடிகளிலேயே கொள்ளப் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்றொடை, மோனை, எதுகை, முரண் இயைபு அளபெடைத்தொடை என ஐவகைப்படும். இவ்வைந்தும் தனித்தனி அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என எண்வகை பெறும். இந்நாற்பதுடன் அந்தாதி, இரட்டை, செந்தொடை என்பனவுஞ்சேர தொடை நாற்பத்துமூன்று ஆகும்.

இரண்டு அடிகளின் முதற்சீரின் முதலெழுத்து அல்லது ஓரடியிலுள்ள சீர்களின் முதலெழுத்து ஒன்றேற வருதல் **மோனை**யெனப்பெறும்.

"முதலெழுத் தொன்றி முடிவது மோனை"

மோனை - முதல். அடிகளில் மோனை வருவது அடிமோனை எனப்படும்.

"ஆதி எழுத்தே அடிதொறும் வரினடி
மோனைத் தொடையென மொழிமனார் புலவர்"

முதலடி முதற்கண் வந்த எழுத்தே எல்லா அடிகளிலும் முதற்கண் வரின் அடிமோனைத் தொடை என்பர்.

சீர்களில் மோனை வருதல் சீர்மோனை எனப்பெறும்

முன்னின்ற எழுத்து பின்னும் வந்து தானும் தானுமாய் ஒன்றுதலும் இனவெழுத்தும் தானுமாய் ஒன்றுதலும் என ஒன்றுதல் இரண்டுவகைபெறும்.

இன எழுத்து ஒன்றின் இனமோனை அல்லது கிளை மோனை எனப்பெறும் இன எழுத்துக்களாவன —

| | | | | |
|---|---|---|---|---|
| அ | ஆ | ஐ | ஔ | |
| இ | ஈ | எ | ஏ | யா |
| உ | ஊ | ஒ | ஓ | |
| ஞ | ந | | | |
| ம | வ | | | |
| த | ச | | | |

ஞ ந, ம வ, த ச என ஆறுமல்லாத ஏனை மெய்கள் அதற்கதுவே மோனையாய் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யெழுத்துக்கள் இனமாக வருவதோடு அம்மெய்களின் மேலேறிய உயிரும் இனமாகவே வருதல் வேண்டும்.

மோனையெழுத்து அளவொத்து இருத்தல் வேண்டும். அதாவது குறிலுக்குக் குறிலும் நெடிலுக்கு நெடிலுமாய் வருதல் வேண்டும்.

முதலிரு சீர்களில் மோனை வருவது இணைமோனை எனப்பெறும்.

"அணிமலர் அசோகின் தளிர் நயங் கவற்றி" முதற்சீரின் முதலெழுத்தும் இரண்டாஞ்சீரின் முதலெழுத்தும் ஒன்றாக இருத்தலைக் காண்க. இது போலவே முதற்சீரிலும் மூன்றாஞ்சீரிலும் வருவது பொழிப்பு மோனை எனப்பெறும்.

"அரிற்குரற் கிண்கிணி அரற்றும் சிறடி"
முதற்சீரிலும் நான்காம் சீரிலும் மோனை வருவது ஒரூஉ மோனை.

"அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி"
இடையிருசீரிலும் ஒருவி வருதலால் இப்பெயர் பெற்றது. ஒருவுதல் — நீங்குதல்

முதல் மூன்று சீரிலும் மோனை வருவது கூழை மோனை எனப்பெறும். கடைச்சீரிற் குறைந்து கூழையாய் நிற்றலால் கூழையெனப் பெயர் பெற்றது.

"அகன்ற அல்குல் அம்நுண் மருங்குல்"
இரண்டாஞ் சீர் ஒழிந்து ஏனை மூன்று சீரிலும் மோனை வருவது மேற்கதுவாய் மோனை எனப்பெறும்.

"அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள்"
மூன்றாஞ்சீர் ஒழிந்து ஏனை மூன்று சீரிலும் மோனை வருவது கீழ்க்கதுவாய் மோனை எனப்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவிர்மதி அனைய திருநுதல் அரிவை"
நான்கு சீரிலும் மோனை வருவது முற்றுமோனை எனப்பெறும்.

"அயில்வேல் அனுக்கி அம்பலைத்து அமர்த்த"
மேலே கூறியவையெல்லாம் நாற்சீரடிகளுக்கே அமையும் என்பதை நினைவிலிருத்தவும்.

நாற்சீரடிகளில் பொழிப்பு மோனை வருதலே சிறப்பு. இன்னுஞ் சில மோனைவகைகளுண்டு. அவை அத்துணைச் சிறப்புள்ளவையல்ல. அவையாவன வருக்க மோனை, நெடில்மோனை, இனமோனை.

ஒருமெய்யோடு புணர்ந்த உயிர்களே வருக்கமாகும். இவ்வருக்க எழுத்துக்கள் மோனையாக அமைவது வருக்க மோனையாகும்.

முதலெழுத்துக்கள் ஒன்றிவராவிடினும் அவை நெடிலாக இருப்பின் நெடில்மோனை எனப்பெறும்.

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"
ஆர்கலி, ஓதலிற் என்பவற்றின் முதலெழுத்துக்கள் ஒன்றி வராவிடினும் அவை நெடிலாக இருப்பதனால் நெடில் மோனையாயிற்று.

மோனை வருமிடங்களில் வல்லினத்துக்கு வல்லினமும் மெல்லினத்துக்கு மெல்லினமும் இடையினத்துக்கு இடையினமுமாய் இன எழுத்துக்கள் வரின் இனமோனையாகும்.

"கருத்துச் செறிவுங் கவிஞர் ஓசையும்
சிறப்பச் சேரும் திறமுறின் கவியாம்"
கருத்து, சிறப்பு என்ற இரு சொற்களிலும் முதலெழுத்துக்கள் வல்லினமாயிருந்தலால் வல்லினமோனையாயிற்று.

"நட்டாரை வாழ்த்தி நலஞ்செய்வார் தம்பாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெச்சிப் புகுவார் பலர்'' எனுங் குறளில் முதலடியின் முதலெழுத்தும் (ந) இரண்டாம் அடியின் முதலெழுத்தும் (மெ) மெல்லினமானதால் மெல்லின மோனையாயிற்று.

''யானை யனையார் எலியனையார் என்றிருவர்
வாழ்வாரிவ் வையகத் து''

எனுங் குறளில் முதலடியின் முதலெழுத்தும் (யா) இரண்டாமடியின் முதலெழுத்தும் (வா) இடையினமாதலால் இடையினமோனையாயிற்று.

## எதுகை

''முதலெழுத் தளவொத் தயலெழுத் தொன்றுவ
தெதுகை அதன்வழி இயையவும் பெறுமே''

என்பர் பல்காயனார். அடியின் தொடக்கத்தில் முதற்சீர் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகைத்தொடையாகும். இரண்டாம் எழுத்து ஒரேயெழுத்தாகவன்றி ஒரே இன எழுத்தாகவுமிருக்கலாம். மூன்றும் நான்காம் எழுத்துக்கள் ஒன்றியிருத்தலுமுண்டு. எதுகை — பொருத்தம் எழுத்துப் பொருத்தம் நோக்கித் தொடுப்பதனால் எதுகைத் தொடை எனப் பெயர்பெற்றது.

இன எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது இன எதுகை எனப்பெறும். அது வல்லின எதுகை, மெல்லின எதுகை, இடையின எதுகை என மூவகை பெறும். வல்லின எழுத்துக்கள் ஒன்றிவரின் வல்லின எதுகை என்றும் மெல்லின எழுத்துக்கள் ஒன்றிவரின் மெல்லின எதுகை என்றும் இடையின எழுத்துக்கள் ஒன்றிவரின் இடையின எதுகை என்றும் சொல்லப்பெறும். நெடில் எழுத்து ஒன்றிவரின் நெடில் எதுகை என்றும் குறுக்க எழுத்து ஒன்றிவரின் குறுக்க எதுகை என்றும் அழைப்பர். முதலெழுத்துக்கும் இரண்டாம் எழுத்துக்கு மிடையே ய், ர், ல், ழ் எனும் எழுத்துக்கள் வரின் ஆசிடை எதுகை என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“யரலழ என்னும் ஈரிரண் டொற்றும்
வரன்முறை பிறழாது வந்திடை உயிர்ப்பினஃ
தாசிடை எதுகையென் றறிந்தனர் கொளலே”
“தக்கோலம் தின்று தலை நிறையப் பூச்சூடி
பொய்க்கோலம் செய்ய ஒழியுமோ”

தக்கோலம், பொய்க்கோலம் என்பவற்றில் ய் ஆசாக அமைந்திருத்தல் காண்க.

அடிகளை வேறு பிரித்து அறிவதற்கு எதுகை துணை செய்கிறது. எதுகையும் மோனையும் ஓசை நயத்தை உண்டு பண்ணுபவை. பாட்டுக்கு இவை வேண்டா என்பது பாட்டியல் அறியார் கூற்றே.

அடிதோறும் எதுகை அமையின் **அடி எதுகை** எனப் பெறும். ஓரடியில் பல சீர்களில் எதுகை அமைதலு முண்டு. இது இணை முதலாகப் பெயர் பெறும்.

“பொன்னின் அன்ன பொறிசுணங் கேந்திப்” என்பதில் பொன்னின் அன்ன என இணையெதுகை வந்தது காண்க.

“பன்மலர்க் கோங்கின் நன்னலம் கவற்றி” என்பதில் பன்மலர் நன்னலம் எனப் பொழிப்பெதுகை வந்தது காண்க. இவைபோல் ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்பவற்றையும் அறிந்துகொள்க.

சீர்முழுவதும் ஒன்றிவரத் தொடுப்பது தலையாகு எதுகை என்றும் ஓரெழுத்துமட்டும் ஒன்றிவரத் தொடுப்பது இடையாகு எதுகை என்றும் மற்றவை கடையாகு எதுகை என்றும் வழங்கப்பெறும். இரண்டாம் எழுத்தின் மேல், ஏறிய உயிர் ஒன்றி வருதல் உயிரெதுகை எனப்பெறும். அடிகளில் ஒவ்வொன்றை விட்டெதுகை அமைந்தால் இடையிட்ட எதுகை எனப்பெறும். முதலிரண்டடியும் ஓரெதுகையாகவும் பின்னிரண்டடியும் வேறோர் எதுகையாகவும் வரின் இரட்டை எதுகை என்பார். தொடர்ந்து பல சீர்களிலும் எதுகைவரின் வழியெதுகை எனப்பெறும். அடியிடையிட்டு எதுகை வருவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. அதனை இடையிட்டெதுகை என்பர். இரண்டா மெழுத்தன்றி மூன்றாம் எழுத்து ஒன்றி வருதலுமுண்டு. அதனை மூன்றாமெழுத்தொன்றெதுகை என்பர். விட்டிசைத் தலால் வல்லொற்றுப்போல் ஓசையமைந்து வரின் **விட்டிசை வல்லொற்றெதுகை** என்பர்.

"**இறுவாய் ஒப்பினஃ தியைபெனப் படுமே**" அடி தோறும் இறுதிக்கண் எழுத்தானும் சொல்லானும் ஒன்றிவரின் அஃது **அடி இயைபுத்தொடை** எனப்பெறும். அடியியைபுத்தொடை சொல்லினால் ஒன்றுவது எழுத்தி னால் ஒன்றுவது என இருவகைபெறும்.

"இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே
நன்மாமேனிச் சுணங்குமார் அணங்கே
ஆடமைத்தோளி ஊடலும் அணங்கே
அரிமதர் மழைக்கணும் அணங்கே
திருநுதற் பொறித்த திலதமும் அணங்கே"

அடிதோறும் சொல்லொன்றி வந்தது காண்க.

ஓரடியிலுள்ள சீரின் இறுதி ஒன்றி வருதலுமுண்டு. இது இணைமுதலாய் ஏழு திறப்படும்.

"மொய்த்துடன் தவழும் முகிலே பொழிலே"
என்பதில் முகிலே பொழிலே என **இணையியைபு** வந் தமை **காண்க**.

"மற்றதன் அயலே முத்துறழ் மணலே"
என்பதில் அயலே மணலே என பொழிப்பு இயைபு வந்தமை காண்க. இவைபோல் ஒரூஉ, கூழை, மேற் கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்பவையும் வரும்.

மோனையாய் வந்து இறுவாய் ஒத்தால் **மோனை** இயைபு என்றும் எதுகையாய் வந்து இறுவாய் ஒத்தால் எதுகை இயைபு என்றும் முரணாய் வந்து இறுவாய் ஒத்தால் முரண் இயைபு என்றும் அளபெடையாய் வந்து இறு வாய் ஒத்தால் **அளபெடை இயைபு** என்றும் பலவாய் வந்து இறுவாய் ஒத்தால் **மயக்கு இயைபு** என்றும் பிற வாராது இறுவாய் ஒத்தால் **செவ்வியைபு** என்று வழங்கப் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றத் தொடைகளுக்குப் போலன்றி இயைபுக்கு இணை, பொழிப்பு முதலியவை இறுதியிலிருந்து பார்த்தல் வேண்டும்.

"மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே"

அடிதோறும் சொல்லும் பொருளும் மாறுபடத் தொடுப்பது **அடிமுரண்தொடை** எனப்பெறும். இது சொல்லால் முரணுதல், பொருளால் முரணுதல் சொல்லும் பொருளும் தம்முள் முரணுதல் என மூவகை பெறும். ஐந்து வகை என்பாரும் உளர். சொலலும் சொல்லும் முரணுதல், பொருளும் பொருளும் முரணுதல், சொல்லும் பொருளும் சொல்லோடு முரணுதல், சொல்லும் பொருளும் பொருளோடு முரணுதல், சொல்லும் பொருளும் சொல்லோடும் பொருளோடும் முரணுதல் என்பவை அவை.

"செந்தொடைப் பகழி வாங்கிச் சினஞ் சிறந்து
கருங்கைக் கானவன் களிற்று நிறத் தழுத்தலிற்"

செந்தொடை, கருங்கை என்பன சொல்லும் சொல்லும் முரணியது காண்க.

"தீமேய் திறல்வரை நுழைஇப் பரிமெலிந்து
நீர்நசை பெறுஅ நெடுநல் யானை"

தீ, நீர் என்பன பொருளும் பொருளும் முரணியது.

முரண் தொடையும் இணைமுதல் முற்று ஈறாக எழு வகைபெறும். அடிதோறும் மாறுபடத் தொடுப்பது அடிமுரணெனப்படும்.

"சீரடி பேரகல் அல்குல் ஒல்குபு" இணைமுரண்.

"சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடம் தாங்கி" பொழிப்பு முரண்.

இவை போல் ஏனையவையும் வரும்.

கடையிணைமுரண், பின்முரண், இடைப்புணர்முரண் என மூவகை விகற்பம் கூறுவாருமுளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடையிணை பின்முரண் இடைப்புணர் முரணென
இவையும் கூறுப ஒருசா ரோரே"
என்பது யாப்பருங்கலம்:

"அளபெடை ஒன்றுவ தளபெடைத் தொடையே"
உயிரளபெடையாயினும் ஒற்றளபெடையாயினும் அடி தோறும் முதலாவது சீரின் முதலாவது சொல்லின் கண் இசைகெடாமல் எழுத்தினால் அளபெடுத்தொன்றின் **அளபெடைத்தொடை** என்றாகும். இதிலும் அடி அளபெடைத்தொடை இணைமுதல் முற்று ஈறாகவுள்ள ஏழு விகற்பங்கள்உண்டு.

"ஆஅ அளிய அலவன்றன் பார்ப்பினோ
டீஇர் இரையுங் கொண் டீரணைப் பள்ளியுள்"
அடிதோறும் முதற்சீர்க்கண் அளபெடுத்து ஒன்றிவரத் தொடுத்துள்ளமை காண்க.

"தாஅட் டாஅ மரைமலர் உழக்கிப்" இணை அளபெடை.

"பூஉக் குவளைப் போஒ தருந்திக்"
பொழிப்பு அளபெடை. இவை போல் ஏனைய அள பெடைகளையும் படித்தறிக.

அடிதோறும் ஈற்றிலுள்ள எழுத்தோ அசையோ சீரோ அடியோ அடுத்த அடியின் முதலில் தொடர்ந்து வரின் **அந்தாதித் தொடை** எனப்பெறும்.

"அடியும் சீரும் அசையும் எழுத்தும்
முடிவு முதலாச் செய்யுள் மொழியினஃ
தந்தாதி தொடையென் றறையல் வேண்டும்"

இறுதியடியின் இறுதியும் முதலடியின் முதலும் ஒன்றாய்வரின் மண்டலவந்தாதி எனப்பெறும். அவ்வாறு வராதன செந்நடையந்தாதி எனப்பெறும். பல விரவி வரின் மயக்கு அந்தாதி என்றும் எழுத்து அசை சீர்களால் இடையிட்டுவரும் அடியந்தாதியை இடையிட்ட அடியந்தாதி என்றும் அழைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்மதி
மதிநலன் அளிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவளவ்
வாசனத் திருந்த திருந்தொளி அறிவனை
அறிவுசேர் உள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை உலகே"

அவிர்மதி மதிநலன் என்பனவற்றில் அசையும் (மதி மதி) முக்குடை முக்குடை என்பனவற்றில் சீரும், 4,5 ஆம் அடிகளும் புரிந்து துன்னிய என்பவற்றில் எழுத்தும் (து, து) அந்தாதித்து வந்தன காண்க.

அடியின் முதலில் வந்த சொல்லே அந்த அடி முழுதும் தொடுக்கப்பட்டு வருவது இரட்டைத்தொடையாகும். இது நாற்சீரடிகளில் வரும்.

"ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினுட் சீறெரி ஒக்குமே ஒக்கும்"

முதலடியில் இரட்டைத் தொடை வந்தது காண்க.

"இரட்டை அடிமுழு தொருசீர் இயற்றே"

எந்தத் தொடையுமின்றி வருவது செந்தொடை. சொற்களை இயல்பாகத் தொடுப்பது. இத்தொடை பெரும்பாலும் ஆசிரியப்பாவில் வரும்.

"செந்தொடை ஒவ்வாத் திறத்தன வாகும்"
"பூத்த வேங்கை வியன்சினை ஏறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே"

பழந்தமிழ்ப் புலவர்கள் செய்யுட்களில் இச்செந்தொடை இயல்பாக ஓசைநயங் கெடாமல் அமைந்துள்ளமை காணலாம். இத்தொடை பிற்காலத்தில் பெரு வழக்குப்பெறவில்லை. காலத்திற்கேற்ப செந்தொடை கைவிடப்பட்டது போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுப்பியல் 7 - ஓசை

சீர்களின் புணர்ச்சியால் தோன்றித் தளைகளால் அமைந்த செய்யுள்களின் தன்மையால் இசைப்பது ஓசை என்பர். ஒவ்வொரு பாவிற்கும் ஒவ்வோர் ஓசையுண்டு வெண்பாவிற்கு செப்பலோசையும் ஆசிரியப்பாவிற்கு அகவலோசையும் கலிப்பாவிற்குத் துள்ளலோசையும் வஞ்சிப்பாவிற்குத் தூங்கலோசையும் உரியன.

ஒருவனுக்கு, ஒருவன் இயல்புவகையால் கூறுங்கால் எழும் ஓசை செப்பலோசை எனப்பெறும். செப்பல்-சொல்லுதல்.

ஒருவனை ஒருவன் விளித்துக் கூறுங்கால் எழுமோசை **அகவலோசை** எனப்பெறும் அகவல்-விளித்தல் - அழைத்தல்.

இடையிடையே உயர்ந்து செல்லுதல் துள்ளலோசையாகும்.

எழுச்சியோ விரைவோ இன்றி அடியில் தூங்காது சீர்தோறும் தூங்குமோசை தூங்கலோசை எனப்பெறும், இது தாழ்ந்து போகும் தன்மையது.

இந் நான்கு ஓசைகளும் தனித்தனியே ஒவ்வொன்றும் மூவகை பெறும்.

செப்பலோசை ஏந்திசைச்செப்பல், தூங்கிசைச் செப்பல் ஒழுகிசைச்செப்பல் என மூவகையாகும்.

முற்றும் வெண்சீர் வெண்டளைவரும் வெண்பாவில் **ஏந்திசைச்செப்பலோசை** வரக் காணலாம். காய்ச்சீர்கள் வெண்சீர் என்றும் காய்முன் நேர்வருதல் வெண்டளையென்றும் முன்னர்க்கண்டோம். எனவே வெண்சீர் வெண்டளை என்பது காய் முன்நேர் வருதலாம்.

முற்றும் இயற்சீர் வெண்டளையால் வரும் வெண்பாவில் நிகழும் ஓசை **தூங்கிசைச் செப்பல்** எனப்பெறும். இயற்சீர் - ஈரசைச்சீர், மாமுன் நிரையும் விளமுன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் கலந்து வரும் வெண்பாவில் நிகழும் ஓசை **ஒழுகிசைச் செப்பல்** எனப்பெறும். ஒழுகிசை என்பது உயர்வுதாழ்வின்றிச் சமமாக நடப்பதாம்.

அகவலோசையும் ஏந்திசை அகவல் தூங்கிசை அகவல் ஒழுகிசை அகவலென மூவகைபெறும்.

முற்றும் நேரொன்றாசிரியத்தளையால் அமையும் போது **ஏந்திசை அகவலோசை** பிறக்கும். மாமுன் நேர் வருதல் நேரொன்றாசிரியத்தளை.

முழுதும் நிரையொன்றாசிரியத்தளையால் வரும் போது **தூங்கிசை அகவலோசை** நிகழும். விளமுன் நிரை வருதல் நிரையொன்றாசிரியத்தளை.

இவ்விரு தளையும் கலந்து வரும்போது உண்டாகும் ஓசை **ஒழுகிசையகவல்** எனப்பெறும்.

துள்ளலோசை ஏந்திசைத்துள்ளல், பிரிந்திசைத் துள்ளல் அகவற்துள்ளல் என மூவகை பெறும். முற்றும் கலித்தளையால் முடியும் போது **ஏந்திசைத்துள்ளல்** உண்டாகும். காய்முன் நிரைவருதல் கலித்தளை.

கலித்தளையும் வெண்சீர் வெண்டளையும் கலந்து வரும் போது பிறக்கு மோசை **அகவற்துள்ளல்** எனப் பெறும்.

கலித்தளையும் வெண்சீர் வெண்டளையும் பிற தளையும் கலந்துவரின் **பிரிந்திசைத் துள்ளலோசை** உண்டாகும்.

வஞ்சிப்பாவிற்குரிய தூங்கலோசையும் மூவகை பெறும். அவை பெருவழக்குப் பெறவில்லை.

ஒன்றிய வஞ்சித்தளையால் வருவது **ஏந்திசைத்தூங்கலோசை.**

ஒன்றாத வஞ்சித்தளையால் வருவது **அகவல் தூங்கலோசை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டுதளையும் விரவிவருவது பிரிந்திசைத் தூங்கலோசை.

# செய்யுளியல்

செய்யுளியல் என்பது செய்யுளின் இலக்கணம் எனப் பொருள் பெறும். செய்யப்பெறுவது செய்யுள்.

"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினில்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

எனும் நன்னூல் நூற்பா செய்யுளின் தன்மையைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றது. இச் செய்யுள் பா, பாவினம் என இருவகை பெறும்.

"செய்யுள் தாமே மெய்பெற விரிப்பின்
பாவே பாவினம் எனவிரண் டாகும்"

என்பது யாப்பருங்கலம்.

பாவென்பது தொல்காப்பியர் காலம் வரை செய்யுளின் ஓசை குறித்தே வந்ததென்பர். பாஎனும் ஓசை பண்பாகு பெயராய் அதனுடைய செய்யுளை உணர்த்திற்று.

செய்யுளோசை நால்வகை பெறுமென முன்னர்க் கண்டோம். பாவும் நால்வகை பெறும்.

"ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே"

என்று தொல்காப்பியம் கூறுகிறது.

"வெண்பா ஆசிரியம் கலியே வஞ்சியெனப்
பண்பாய்ந் துரைத்த பாநான் காகும்"

என்றே யாப்பருங்கலமும் கூறுகிறது. இப்பா நான்கையும் ஆசிரியப்பா வெண்பா இரண்டனுள்ளும் அடக்கிக் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
ஆசிரி யப்பா வெண்பா என்றாங்
காயிரு பாவினுள் அடங்கும் என்ப"

எனும் தொல்காப்பியம் இதனைத் தெளிவு படுத்துகின்றது. ஆசிரியப் பாவினுள் வஞ்சிப்பாவும் வெண்பாவினுள் கலிப்பாவும் அடங்கும்.

பா நான்குடன் மருட்பா என்பதையும் சேர்த்து பா ஐவகை என்பர் சிலர். வெண்பாவின் கூறும் ஆசிரியப்பாவின் கூறும் கலந்து மயங்கவரும் மருட்பாவினை தனிப்பட்ட ஓரினம் அன்று என மறுப்பர் வேறு சிலர்.

பாவேறுபாடு அமைவதற்கு சீர், தளை, அடி ஆகிய மூன்று செய்யுளுறுப்பே காரணம். எழுத்து, அசை, தொடை ஆகிய மூன்று உறுப்புக்களும் எல்லாப் பாக்களுக்கும் பாவினங்களுக்கும் பொது.

பாவினம் தாழிசை, துறை, விருத்தம் என மூவகை பெறும். இவை மூன்றும் நால்வகைப் பாவுடனும் உறழ பாவினம் பன்னிரண்டாகும். ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம், வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம், வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம், கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் என்பவையே அப்பன்னிரண்டும்.

பாவகைகளையும் பெருவழக்காயுள்ள பாவினங்களையுமே இப்பகுதியில் கூறுவோம். மேற்கொண்டு ஆழ்ந்து கற்க விழைவோர் யாப்பிலக்கண நூல்களைப் பயின்று தெரிந்து கொள்க. செய்யுளிலக்கணம் தெரிந்து கொண்டால் செய்யுளியற்றவும் செய்யுள்களை நன்கு புரிந்து கொள்ளவும் முடியும், தமிழ்ச்செய்யுள் மரபு அறியாதார், தமிழிலக்கிய மரபு தேராதார் செய்யுளுக்கு இலக்கணம் சிறை என்பர். அவர் சொல் போற்றாது செய்யுளிலக்கணத்தை நன்கு கற்று நல்ல செய்யுள்களை இயற்றித் தமிழ் வளம் பெருக்குக. எதுகை மோனை நய மிருப்பின் செய்யுள் இன்னோசை பெறும். ஆதலால் எதுகை மோனை உரிய இடத்தில் வரும்படி செய்யுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றுக. சீர்களில் இயன்றவரை சொற்கள் முழுமையாக அமையும்படி பார்த்துக் கொள்க. சீருக்காகச் சொற்களைப் பிரித்தல் வகையுளி எனப்பெறும். வகையுளி பிழையன்று. ஆனால் அழகில்லை. குற்றுகரம் வருமிடத்து அதனைப் புணர்த்தல் இன்றியமையாததே. பிரித்து வைத்தல் பிழையாகும். இதனை யதிவழு என்பர். எழுத்துப் பிழை சொற்குற்றம் வராமலும் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

# பாவியல் 1 – வெண்பா

செப்பலோசையுடையதாய் ஈற்றடி முச்சீரடியாயும் ஏனையடி நாற்சீரடியாயும் வெண்சீரும் இயற்சீரும் வந்து வெண்டளை தட்டு வேற்றுத்தளை விரவாது காசு, பிறப்பு, நாள், மலர் எனும் வாய்பாட்டால் முடிவது வெண்பா. வெண்பாவில் முக்கியமானது தளை. வெண்டளையின் இலக்கணம் தெரியாமல் வெண்பா இயற்ற முடியாது. மா முன் நிரையும், விளம் முன் நேரும், காய் முன் நேரும், வருதலே, வெண்டளை. தளை பார்க்கும்போது நின்ற சீரையும் வருஞ்சீரின் முதலசையையும் பார்த்தல் வேண்டும். வெண்பாவில் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் தவிர வேறு தளைகள் வரா. இயற்சீர் நான்கும் வெண்சீர் நான்கும் மட்டுமே வரும். உகரம் அல்லாத ஈறுகவுடைய சொல் வெண்பா ஈற்றில் ஈரசைச் சீராக வராது. உகரம் பெரும் பான்மையும் குற்றுகரமாகவே வரும். இதுவே வெண்பாவின் பொது விலக்கணம்.

வெண்பா, குறள், சிந்தியல், அளவியல், பஃறொடை, கலி என ஐவகை பெறும். ஈரடி இயைந்தது குறள் வெண்பா.

"ஈரடி இயைந்தது குறள்வெண் பாவே"

வெண்பாவுக்குரிய பொது விலக்கணம் எல்லாம் பெற்று ஒன்றே முக்கால் அடியுடையதாய் வருவது குறள் வெண்பா. இதனைக் குறள் வெண் பாட்டு, வெள்ளைக் குறள், வெண்குறள் எனவும் அழைப்பர். இரண்டடிகளிலும் ஒரெதுகை பெற்று வருவது ஒரு விகற்பம் எனப் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்"

ஒன்றுக்கு மேற்பட்ட எதுகையுடையது **பலவிகற்பம்**

"பெரிதினிது பேதையர் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்"

வெண்பாவுக்குரிய பொது விலக்கணமெல்லாம் பெற்று மூன்றடியாய் வருதல் **சிந்தியல் வெண்பா.** இது நேரிசைச் சிந்தியல் வெண்பா இன்னிசைச் சிந்தியல் வெண்பா என இருவகைபெறும். **இரண்டாம் அடியில் தனிச்சொல்வர ஒரு விகற்பத்தாலோ பல விகற்பத்தாலோ வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பா**

"அறிந்தானை ஏத்தி அறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செவ்வான் உரைக்கும் — சிறந்தார்
சிறந்தமை ஆராய்ந்து கொண்டு

(ஒரு விகற்பம்)

"காளையோ டாடிக் கதக்காரி தோன்றுங்கால்
வாளழுவ மக்களோ டாகுமாம் — கோளொடும்
பொன்றுமாம் நங்காய்நம் கேள்

(இரு விகற்பம்)

வேறு வகையாய் அமையும் சிந்தியல் வெண்பா இன்னிசைச் சிந்தியல் வெண்பாவாகும்.

ஓர் அல்லது இரு விகற்ப நாலடி வெண்பாவில் முதலிரண்டடியின் எதுகை பெற்ற தனிச்சீரை இரண்டாவதடியின் ஈற்றில் பெற்று வருவது நேரிசை வெண்பா எனப் பெறும்.

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

(இரு விகற்பம்)

**விகற்பமெனில் வேறுபாடு**

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
**அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு** — சிறந்தீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று.
(ஒரு விகற்பம்)

வேறு வகையில் வருவதெல்லாம் **இன்னிசை வெண்பா**வாகும்.

வெண்பாவுக்குரிய பொதுவிலக்கணம் எல்லாம் பெற்று நாலடிக்கு மேல் பன்னிரண்டடி வரை வருவது **பஃறொடை வெண்பா** எனப்பெறும். பஃறொடை — பல் தொடை. அடியிரண்டு ஒரு தொடை. பல்தொடையென்பது ஐந்து முதலிய அடிகளை ஐந்து முதல் பன்னிரண்டடிவரை வரும் நெடு வெண்பாட்டே பஃறொடைவெண்பா. இதுவும் இன்னிசைப் பஃறொடை நேரிசைப்பஃறொடை என இருவகையாகும். இவ்விரண்டடி ஒரெதுகையாய் இரண்டடிக் கொருமுறை அவ்விரண்டடியின் எதுகையுடைய தனிச் சொல் பெற்று வருவது **நேரிசைப் பஃறொடை வெண்பா**

''ஆய்ந்தறிந்து கல்லாதான் கல்வியும் ஆறறிவில்
தோய்ந்தறிந்து சொல்லாதான் சொற்பெருக்கும்-
தீந்தமிழின்
சொல்லிருக்க வன்கடுஞ்சொற் சொல்வதூஉம்
தன்னனையாள்
இல்லிருக்க வேறில் லிரப்பதூஉம்—நெல்லிருக்கக்
கற்கறித்து மண்டின்று காய்த்துக் களத்தடித்த
புற்கறித்து வாழ்வதனைப் போன்ம்''

வேறு வகையில் வருவனவெல்லாம் **இன்னிசைப் பஃறொடை வெண்பா**வாகும்.

வெண்பாவுக்குரிய பொது விலக்கணமெல்லாம் பெற்று பன்னிரண்டடிக்குமேல் வருவது **கலிவெண்பா**. இதுவும் நேரிசைக்கலிவெண்பா இன்னிசைக்கலிவெண்பா என இருவகை பெறும். இரண்டிரண்டு அடிகளுக்கு எதுகைபெற்றும் இரண்டாம் அடிதோறும் அதே எதுகைபெற்ற தனிச்சீர்பெற்றும் வருவது **நேரிசைக்கலி வெண்பா**. இரண்டாம் அடியீற்றில் தனிச்சீர்பெறாது வருவது **இன்னிசைக்கலிவெண்பா**வாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூது, உலா, மடல் ஆகிய பிரபந்தங்கள் இயற்றக் கலிவெண்பாவே பயன்பெற்றது.

## பாவியல் 2 - ஆசிரியப்பா

அளவடியதாகியும் கருவிளங்கனி, கூவிளங்கனி எனும் இருசீரும் கலவாது இயற்சீர் பயின்றும் அயற்சீர் விரவியும் தன்தளை தழுவியும் பிறதளை மயங்கியும் அகவலோசையுடையதாய் மூன்று முதலிய பலவடிகளால் வருவது ஆசிரியப்பா. **ஆசிரியப்பா எனினும் அகவற்பா எனினும் ஒன்றே.**

**"அகவல் என்ப தாசிரியப் பாவே"**

ஆசிரியப்பாவில் பெரும்பாலும் ஈரசைச்சீர் வருவதால் ஈரசைச்சீரை ஆசிரியச்சீர், அகவற்சீர் என அழைப்பர்.

ஆசிரியப்பா நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என நால்வகை பெறும்.

"நேரிசை இணைக்குறள் மண்டிலம் நிலைப்பெயர்
ஆகுமண் டிலமென் றகவல் நான்கே"

அகவல் ஓசையைத் தம் ஓசையாகவுடைய நால்வகை ஆசிரியப்பாவும் ஏ, ஓ, ஈ, ஆய், என், ஐ எனவிறும்

"அகவல் இசையன அகவல் மற்றவை
ஏஓ ஈஆய் என்ஐயென் றிறுமே"

எல்லா ஆசிரியப்பாவும் ஏ என முடிதலே சிறப்பெனினும் நிலை மண்டில ஆசிரியப்பா என் என முடிதலே சிறப்பு.

"ஒழுக்கல் வேண்டும் உணர்ந்திசி னோரே"
என்பதில் ஏயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ'' என்பதில் ஓவும்

''செழுந்தேர் ஓட்டிய வென்றியொடு சென்றீ''
என்பதில் ஈயும்

''உண்கண் பசப்ப தெவன்கொல் அன்னாய்'' என்பதில் ஆய் என்பதும்.

''புலர்ந்தது மாதோ புரவலற் கிரவென்''
என்பதில் என் னும்

''வாண்முக எருத்தம் கோட்டினள் மடந்தை''
என்பதில் ஐயும்

ஈற்றெழுத்தானதைக் காண்க.

நேர்நேர் இயற்றளையான் வரும் அகவல் நிரைநிரை இயற்றளையான் வரும் அகவல் இவ்விருதளையும் ஒத்தாகிய அகவல் என அகவல் மூவகை பெறும். இவை முறையே ஏந்திசை அகவல் தூங்கிசை அகவல் ஒழுகிசை அகவல் எனப்பெறும்.

''போது சாந்தம் பொற்ப ஏந்தி''

என்பது ஏந்திசை அகவல்.

''அணி நிழல் அசோகமர்ந் தருநெறி நடாத்திய''
என்பது தூங்கிசை அகவல்

''ஐயன் அரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே''

என்பது ஒழுகிசை அகவல்.

நேரிசை ஆசிரியப்பா நால்வகை ஆசிரியப்பாவினுள்ளும் சிறந்தது. ஈற்றயலடி தவிர ஏனையடிகள் அளவடியாக வருவது நேரிசை ஆசிரியம். ஈற்றயலடி எருத்தடி எனவும் பெறும்

''அந்த அடியின் அயலடி சிந்தடி
வந்தன நேரிசை ஆசிரி யம்மே''

''சிறுவெள் ளரவின் அவ்வரிக் குருளை
கான யானை அணங்கி யாஅங்கு
இளையள் முளைவாள் எயிற்றள்
வளையுடைக் கையளெம் அணங்கி யோளே''

முதலடியும் ஈற்றடியும் அளவடியாக இடையே குற ளடியும் சிந்தடியும் வருவது இணைக்குறள் ஆசிரியப்பா.

"அளவடி அந்தமும் ஆதியு மாகி
குறளடி சிந்தடி என்று பிரண்டும்
இடைவர நிற்ப நிணைக்குற ளாகும்"

"நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே"

எல்லா அடியும் அளவடியாக வருவது நிலைமண்டிலம்

"ஒத்த அடியின் ஆகியும் ஒற்றிற
நிற்பவும் என்னும் நிலைமண் டிலமே"

நிலையுடைய நாற்சீரடியான் வருதலால் நிலைமண்டிலம் என்றாயிற்று.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை ஆகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறு கோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"

அடிகளை முன் பின்னாக மாற்றினும் பொருள் மாறு படாதிருப்பது அடிமறி மண்டிலம். நின்ற நிலை பெயர்ந்து மடங்கிச் சென்று நிற்றற்கேற்ற அடிகளையு டைய நிலைமண்டில ஆசிரியப்பா இது.

"மாறுக் காதலர் மலைமறந் தனரே
ஆறுக் கட்பனி வரலா னாவே
ஏறு மென்றோள் வளை நெகி ழும்மே
கூறாய் தோழியாம் வாழு மாறே"

ஆசிரியப்பா அடி பெருகை பெறல் சிறப்பு. இவ்விரண்டு அடிகளுக்கு எதுகை வைத்துப் பாடுதல் பிற்கால வழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுளில் எதுகையின்றியே பாடினர். ஆசிரியப்பா மெய்ப்பா, அரசர்பா எனவும் பெறும்.

# பாவியல் 3 - கலிப்பா

துள்ளல் ஓசையுடையதாய் வெண்சீர் மிகப்பெற்று மாச்சீரும் விளங்கனிச் சீரும் பெறாது பிறசீர்களும் சிறுபான்மை கலந்து கலித்தளையும் அயற்றளையும் தழுவி தரவு, தாழிசை, அராகம் அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் எனும் ஆறு உறுப்பினுள் ஏற்பன கொண்டு நாற்சீரடியால் வருவதே **கலிப்பா.** கலிப்பாவை **முரற்கை** எனவும் அழைப்பர்.

கலிப்பாவின் முதலுறுப்பு **தரவு.** மற்றையுறுப்பின் பொருள்களைத் தொகுத்துத் தருவது இது. இதனை எருத்து எனவும் வழங்குவர்.

இரண்டாவது உறுப்பு **தாழிசை.** அடிகளாலே தரவினின்றுந் தொகை குறைந்து நிற்பது இது. இதனை இடை **நிலைப்பாட்டு** எனவும் அழைப்பர். தரவு தாழிசைகளிலே பெரும்பாலும் புளிமாங்காய்ச்சீரும் கருவிளங்காய்ச்சீரும் வரும். இரண்டினுக்கும் அடி அளவடியாகும்.

தனியே சொல்லப்படும் ஒரு சீராய்ப் பொருள் நிரம்பி விட்டிசைத்துப் பெரும்பாலும் சுரிதகத்தின் முன்னே நிற்பது. தனிச்சொல் விட்டிசை, கூன், தனிநிலை, அடைநிலை என்பன ஒரு பொருட் சொற்கள்.

தனிச் சொற்குப் பின்னே அகவற்பா வெண்பா எனும் இரண்டனுள் ஒன்றாய் வந்து கலிப்பாவின் இறுதியுறுப்பாய் நின்று முடிப்பது சுரிதகம். சுரிதகம் என்றால் நமிந்து உச்சரிக்கப் படுதல் என்பது பொருள். அடக்கியல், போக்கியல், வாரம், வைப்பு, போக்கு என்பன இதற்குரிய வேறு பெயர்கள்.

**அம்போதரங்கம்** என்பது அலைபோல் வரவரச் சுருங்கி வருவது என்பது அம்போ — நீரினது, தரங்கம் — திரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்சீரடியாய் உயர்ந்து பின்னர் முச்சீரடியாய்ச் சுருங்கி, பின்னர் இருசீரடியாய் அதனினும் சுருங்கி முடிவது. அசையடி, சொற்சீரடி, எண், பிரிந்திசைக்குறள் என்பன இதன் வேறு பெயர்கள்.

குறிலிணையாலாய நிரையசைச்சீர்களையே பெரும்பாலும் பெற்று மாத்திரை நீளுதலும் இடையிலே துணிதலுமின்றிக் கடுகிச் செல்லும் அடிகளால வருவது **அராகமாகும்.** அராகம் — கடுகுதல். இதனையே வண்ணகம், முடுகியல், அடுக்கியல் என்பர் வண்ணித்துப் புகழ்வது வண்ணகம். முடுகிச் செல்வது **முடுகியல்.** சீர்கள் செறிந்து நிற்குமாறு அடுக்கப்படும் இயல்புடையது **அடுக்கியல்.**

ஒத்தாழிசைக் கலிப்பா, வெண்கலிப்பா, கொச்சகக் கலிப்பா, கட்டளைக்கலிப்பா எனக் **கலிப்பா நான்கு வகை** பெறும்.

**ஒத்தாழிசைக் கலிப்பா** மூவகைபெறும். நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா என்பவையே அவை.

**நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா** ஒரு தரவு, மூன்று தாழிசை தனிச்சொல் சுரிதகம் ஆகியவற்றை உறுப்பாகப் பெற்றுவரும். சுரிதகம் நேரீற்று இயற்சீரும் நிரை நடுவாகிய கனிச்சீரும் பெரும்பாலும் நிரை முதலாகிய வெண்பாச்சீர் மிகுந்து தன்தளையும் பிறதளையும் தழுவிவரும் கலிப்பாவுக்குரிய உறுப்புக்கள் எல்லாம் இன்றி பெரும்பாலும் காய்ச்சீர்களைப் பெற்று வரும்.

**அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா** தாழிசை முதலிய ஆறனுள் அராகம் ஒழிந்த ஐந்து உறுப்பையும் கொண்டுவரும்.

**வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா**, ஒரு தரவு, மூன்று தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்புகளையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கொண்டுவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்கலிப்பா ஒரு வகையே. கலிப்பா வேறுதளை விரவி இசை மட்டும் துள்ளலிசையாகவும் முற்றும் வெண்டளை இயைந்தும் சிந்தடியான் முடியுமாயின் வெண்கலிப்பாவாகும். வெண்டளை விரவும் போது காய்முன் நேர் முதல் வெண்சீரே இடையிடை வரும் ஆசிரியத்தளை விரவும் போது விளமுன் நிரைமுதல் காய்ச்சீர் சிறுபான்மை வரும். முற்றும் வெண்டளை இயைந்து வரும் வெண்கலிப்பாவிலே நிரை முதல் வெண்சீர் பெரும்பாலும் வரும். நேரீற்று இயற்சீர் முன் புளிமாவும் வரும்.

அளவடி நான்கு கலியோசை பெற்று வருவது கொச்சகக் கலிப்பா நான்கடியும் ஓரெதுகை பெறல் வேண்டும். ஐந்தடியாலும் எட்டடியாலும் பாடப்பட்டுள்ள கொச்சகக் கலிப்பாக்களும் உண்டு.

கொச்சகக் கலிப்பா தரவு கொச்சகம், தரவிணைக் கொச்சகம், சிஃறாழிசைக் கொச்சகம், பஃறாழிசைக் கொச்சகம், மயங்கிசைக் கொச்சகம், என ஐந்து வகை பெறும்.

தரவு ஒன்று பெற்று வருவது தரவு கொச்சகம்.

தரவு இரண்டு பெற்று வருவது தரவிணைக் கொச்சகம்

சில தாழிசைகளோடு பிற உறுப்புக்களையும் கொண்டு வருவது சிஃறாழிசைக் கொச்சகம்

பல தாழிசைகளோடு பிற உறுப்புக்களையும் கொண்டு வருவது பஃறாழிசைக் கொச்சகம்.

தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் எனும் ஆறும் மிக்கும் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் பலவாறு மயங்கி வருவது மயங்கிசைக் கொச்சகம்.

கட்டளைக் கலிப்பா ஒரு வகையே. தேமா புளிமா என்பன ஒற்றை முதற் சீராகவுடைய நாற்சீரடி முதலசை நேர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் பதிஞேரெழுத்தும் நிரையாயின் பன்னிரண்டெழுத்தும் பெற்று இஃதோர் அரையடியாய் இத்தகைய அரையடி இரண்டு கொண்ட அடி நான்கு வருவன **கட்டளைக் கலிப்பா.** எழுத்தெண்ணும் போது **ஒற்று எண்ணக் கூடாது.**

# பாவியல் 4 - வஞ்சிப்பா

தூங்கல் ஓசையுடைத்தாய் தன்தளை பெரும்பான்மையும் பிறதளை சிறுபான்மையும் தழுவி குறளடியாலேனும் சிந்தடியாலேனும் மூன்று முதல் யாவடிகளைக் கொண்டு தனிச் சொல் பெற்று அகவற் சுரிதகத்தால் முடிவது **வஞ்சிப்பா.**

**"தூங்கல் இசையன வஞ்சி மற்றவை**
**ஆய்ந்த தனிச்சொல்லோ டகவ லின் விறுமே"**

பெரும்பாலும் தேமாங்கனி புளிமாங்கனி கூவிளங்கனி கருவிளங்கனி ஆகிய கனிச்சீர்களே வரும். வஞ்சியடிகளுக்குப் பின் தனிச் சொல் வரும். ஆசிரியச் சுரிதகத்தின் ஈற்றயலடி பெரும்பாலும் முச்சீர் பெற்றே வரும் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடியும்.

வஞ்சிப்பா இரு வகைபெறும். குறளடி வஞ்சிப்பா சிந்தடிவஞ்சிப்பா என்பவை அவை. இரு சீரடியால் வருவது குறளடி வஞ்சிப்பா முச்சீரடியால் வருவது சிந்தடி வஞ்சிப்பா,

"பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்திரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ மகிழ்தூங் கூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே''

இது குறளடி வஞ்சிப்பா. இதில் இருசீரடிகள் ஆறு முதலில் வந்து பின்னர்த் தனிச் சொல் வந்து பின்பு ஆசிரிய அடிகளால் சுரிதகம் வந்தது.

## மருட்பா

புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து செவியறிவுறூஉ எனும் பொருள்களின் மீது வெண் பாவாய் முன்வந்து பின் அகவலாய் ஒருசெய்யுள் முடியுமாயின் அது **மருட்பாவாகும். இந்நான்கு பொருளிலல்லது வேறு பொருளில் மருட்பா வராது.**

**''வெள்ளை முதலா ஆசிரியம் இறுதி
கொள்ளத் தொடுப்பது மருட்பா ஆகும்''**

சமனிலை மருட்பா, வியனிலை மருட்பா என **மருட்பா இருவகைபெறும்**, இருபாவின் அடிகளும் சமமாகவரின் **சமனிலை மருட்பா**. வெண்பா அடிகள் குறைவாகவும் அகவல் அடிகள் மிகுதியாகவும் வரின் **வியனிலை மருட்பா.**

**புறநிலை வாழ்த்தாவது** ஒருவனை முன்னிலையாக்கி வழிபடு கடவுள் நிற்புறம் காத்து நிற்கப் பழியிற் பொருளுடன் வழிவழி வாழ்க என அவனையும் அவன் வழியினையும் வாழ்த்துவது.

**கைக்கிளையாவது** காட்சி முதலாய்க் கல்வியின் ஒருதலை வேட்கையிற் புலம்புதலாகும்.

**வாயுறை வாழ்த்தாவது** இப்பொழுது வெறுப்பினைக் கொடுப்பினும் பின்னர்ப் பெருநன்மையளிக்கும் என்று உண்மைப் பொருளை வற்புறுத்தி வாழ்த்துவது.

பெரியோர் அறிவுறுத்துவது **செவியறிவுறூஉ.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் வெண்பாவோ என ஐயுறச் செய்து முடி வில் ஆசிரியப்பாவோ என ஐயுறச் செய்வதால் இதனை மருட்பா என்பர்.

## பரிபாடல்

இன்னபா என்னும் வரையறையின்றி நான்கு பாவும் கலந்துவருவது **பரிபாடல்** இதில் கலியுறுப்பாற னுள் தாழிசை தவிர்ந்த ஏனை ஐந்தும் உறுப்பாக வரும். அடி முதலில் அசை அல்லது சீர் தனித்து வரும்.

## நூற்பா

நூற்பா என்பது குறைந்த எழுத்துக்களாலாய சொற் றொடராய்ப் பல்வகைப் பொருள் செறிந்து திட்ப நுட் பத்தோடு சிறந்து அடி தொடை ஒன்றுமின்றி அகவற் பாவே போன்று வருவது. இஃது ஒரடியிலும் வரும். இதனை வடவர் சூத்திரம் என்பர். சூத்திரம் என்றால் பொருளை இறுகப் பிணித்து நிற்பது எனப் பொருள் பெறும்.

''சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பம் சிறந்தன சூத்திரம்''

என்பது நன்னூல். சூத்திரமாவது கண்ணாடியின் நிழல்போல் விளங்கத் தோன்றி பொருள் எளிதில் விளங்குமாறு யாப்பின்கண் தோன்ற யாப்பது என் பர் தொல்காப்பியர்.

''அவற்றுள்
சூத்திரந் தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை நால்வகைப் பாக்கள் பற்றிப் பார்த்தோம். இனி அப்பாக்களின் இனமான பாவினம் பற்றிப் பார்ப்போம்.

# பாவினவியல் - 1 தாழிசை

''தாழிசை துறையே விருத்தம் என்றிவை
பாவினம் பாவொரு பாற்பட் டியலும்''

ஒவ்வொரு பாவிற்கும் தாழிசை, துறை, விருத்தம் என மும்மூன்று இனங்கள் உண்டு. இம் மூன்றும் வெண்பா முதலிய நான்கிற்கும் ஒரு புடையொத்து தனித்தனி இனமாய் வருதலால் பாவினம் எனப்பெற்றது. மருட்பா பாவகையுள் ஒன்றாகக் கருதப்பெறாததால் அதற்கு இனமுமில்லை.

ஒவ்வொரு பாவிற்கும் மும்மூன்று இனங்களாக பாவினங்கள் பன்னிரண்டாயிற்று. வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம், ஆசிரியத் தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம்; கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம், வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம், என்பவையே அப்பன்னிரண்டும். இதனை வெண்டாழிசை. ஆசிரியத்தாழிசை, கலித்தாழிசை, வஞ்சித்துறை. வெளிவிருத்தம், ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், வஞ்சி விருத்தம் எனவும் தொகுப்பர். தாழிசையும் துறையும் பெருவழக்குப் பெறுமையால் அவை பற்றி மேற்போக்காக அறிந்துகொண்டு பெருவழக்குப் பெற்ற விருத்தம் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

''அந்தடி குறைநவும் செந்துறைச் சிதைவும்
சந்தழி குறளும் தாழிசைக் குறளே''

குறள்வெண்பாவில் கலித்தளை கலந்து செப்பலிசை கெட்டு வந்தால் குறட்டாழிசையாகும். இது நாற்சீரின் மிக்க பலசீரான் வந்து அடி இரண்டாய் ஈற்றடி குறைந்து வரும் அடி இரண்டாய் அளவொத்து விழுமிய பொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞம் ஒழுகிய ஓசையுமின்றி செந்துறை வெள்ளையிற் சிதைந்து வருவது செந்துறைச் சிதைவுத் தாழிசைக்குறள் எனப்பெறும்.

"அடியொரு மூன்றுவந் தந்தடி சிந்தாய்
விடினது வெள்ளொத் தாழிசை யாகும்"

மூன்றடியாய் ஈற்றடி வெண்பாவே போல முச்சீரடியாய் இறுவது வெண்டாழிசையாகும். வெண்டளைபெற்ற சிந்தியல் வெண்பா ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வரின் வெள்ளொத்தாழிசையாகும்.

வேற்றுத்தளை கலந்து முதலில் வெண்டளை பெற்று வருவது வெண்டாழிசை.

"மூன்றடி ஒத்த முடிபின் ஆய்விடின்
ஆன்ற அகவற் ருழிசை யாகும்"

எனைத்துச் சீரானும் மூன்றடிகள் அளவில் ஒத்த ஒரு பொருண் மேல் மூன்றடுக்கிவருவன ஆசிரியத்தாழிசை யாகும். தனித்துவரும் ஆசிரியத் தாழிசையும் உண்டு. அது சிறப்பில்லை.

கலித்தாழிசை கலியொத்தாழிசை எனவும் வழங்கப் பெறும்-

"அடியெனைத் தாகியும் ஒத்துவந் தளவிலிற்
கடையடி மிகுவது கலித்தா ழிசையே"

இரண்டு அடிகளும் அதற்கு மேற்பட்ட அடிகளும் பெற்று வரும் ஈற்றடி சீர்மிகுந்துவரும். ஏனைய அடிகள் சீர்பெற்று வருவதில் ஒத்தும் ஒவ்வாதும் இருக்கும். இது தனித்தேனும் ஒரு பொருண் மேல் மூன்றடுக்கியேனும் வரும்.

"குறளடி நான்மையிற் கோவை மூன்றும்
வருவன வஞ்சித் தாழிசை தனிவரின்
துறையென மொழிய துணிந்திசி னோரே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறளடி நான்குள்ளனவாய்க் கோவைப்பட்டு வருகின்ற செய்யுள் மூன்றே ஒரு வஞ்சித் தாழிசை. மூன்றடுக்கி வருஞ் செய்யுளே தாழிசை.

## பாவினவியல் 2 - துறை

நால்வகைப் பாவிற்குத் துறை போன்றிருத்தலால் துறை எனப் பெற்றது. துறைபோன்றிருத்தலாவது தத்தம் பாவின் இயல்புகள் எல்லாம் வந்து ஒடுங்கி நிற்கப் பெறுதல். இத்துறை நான்கு வகைபெறும். வெண்செந்துறை, ஆசிரியத்துறை, கலித்துறை, வஞ்சித்துறை என்பனவையே அந்நான்கும். குறள்வெண் செந்துறை வெண்பாவுக்கு இனமாயிருப்பது இதனைச் செந்துறைப் பாட்டு, செந்துறை, வெள்ளை எனவும் அழைப்பர்.

"ஒழுகிய ஓசையின் ஒத்தடி இரண்டாய்
விழுமிய பொருளது வெண்செந் துறையே"

இரண்டடியாய் தம்முள் அளவொத்து வருவது குறள் வெண் செந்துறை விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் இதற்கு உரியன. இதில் தளைபற்றிக் கவனிக்க வேண்டுவதில்லை. இரண்டடிகளுக்கு எதுகை வேண்டும்.

"ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே"

இது நாற்சீரடிக் குறள்வெண் செந்துறை.

"மூன்றடி முதலா ஏழடி காறும்வந்
தீற்றடி சிலசில சீர்பத நிற்பினும்
வேற்றொலி விரவினும் வெண்டுறை யாகும்"

மூன்றடிச் சிறுமையாய் ஏழடிப் பெருமையாய் இடை இடை நான்கடியானும் ஐந்தடியானும் ஆறடியானும் வந்து பின் பிற சிலவடி சில சீர் குறைந்து வருவது

வெண்டுறையாகும். இஃது ஒரோவி வெண்டுறை வேற்றொலி வெண்டுறை என இருவகைபெறும்.

"கடையதன் அயலடி கடைதபு நடையவும்
நடுவடி மடக்காய் நான்கடி யாகி
இடையிடை குறைநவும் அகவற் றுறையே"

எனைத்துச் சீரானும் நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவனவும் நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வருவனவும், நான் கடியாய் இடையிடை குறைந்து வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவனவும் ஆசிரியத்துறை. இவ்வாசிரியத்துறை இக்காலத்தில் பயன்படுவதில்லை.

"வரிகொள் அரவும் மதியும் சுழலக்
கரிகால் ஏந்தி யாடுமே
கரிகால் ஏந்தி யாடும் இறைவன்
புரிபுன் சடைமேற் புனலும் பிறழுமே"

இஃது இடை மடக்காய் வந்த ஆசிரியத்துறை.

"நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை"

ஐஞ்சீரடி நான்காய் வருவது கலித்துறை. கலித்துறையில் சந்த வேறுபாடுகளுமுண்டு. ஒவ்வோரடியும் தனித் தனிப் பொருள் முடிபுள்ளதாய் அவ்வடியை எங்கே வைத்துப் பார்த்தாலும் பொருளும் சந்தமும் வழுவாது முடியும் கலித்துறை கலிமண்டிலத்துறை எனப்பெறும்.

"மிக்க மாதவம் வீட்டுல கடைதலை விளைக்கும்
தக்க தானங்கள் தணிப்பரும் போகத்தைப்
பிணிக்கும்
தொக்க சீலங்கள் நடுக்கமில் துறக்கத்தைப்
பயக்கும்
செக்கென் பூசனை திகழொளிப் பிழம்பினைத்
திருத்தும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாமல் நிற்பக் கடையொரு சீரும் விளங்காயாகி வரும் ஐஞ்சீரடி நான்கு கொண்டு வருவது கட்டளைக் கலித்துறை. எழுத்து எண்ணி இயற்றும் கலித்துறையாதலால் கட்டளைக் கலித்துறையாயிற்று. ஓரடிக்கு எழுத்து முதலசை நேராயின் பதினாறும் நிரையாயின் பதினேழுமாம். இக் கட்டளைக் கலித்துறையால் முழுதும் இயற்றுவதே கோவை நூலாகும்,

"அள்ளிக் கொடுக்கின்ற செம்பொனும் ஆடையும்
ஆதரவாய்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும் என்னைக்
குறித்ததல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்தி லேயென்
துடுக்கடக்கி
பள்ளிக்கு வைத்தில னேதந்தை யாகிய
பாதகனே"

இது நேரசையை முதலாகவுடைய கட்டளைக் கலித்துறை.

இருசீரடி நான்காய் ஒரு பொருண்மேல் ஒன்றாய் வருவது வஞ்சித்துறை. இதனை வஞ்சி நிலைத்துறை எனவும் வழங்குவர். ஒருபொருண்மேல் ஒன்றாய் அடிமறியாய் வரின் வஞ்சி மண்டிலத்துறை எனப்பெறும். ஒரு பொருண்மேல் மூன்றுவரின் வஞ்சித்தாழிசையாகும்.

"மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தன காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்"

## பாவினவியல் 3 - விருத்தம்

வெளிவிருத்தம், ஆசிரியவிருத்தம் கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம் என விருத்தம் நால்வகைபெறும். வெளிவிருத்தமும் வஞ்சிவிருத்தமும் அத்துணை வழக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுததால் அவைபற்றி மேற்போக்காக முதலில் பார்த்துப் பின்னர் ஆசிரியவிருத்தம், கலி விருத்தம் ஆகியவைபற்றி விரிவாகப் பார்ப்போம். வெளிவிருத்தம் வெண்பாவின் இனம் இது நான்கடி பெற்றுவரும். அடி தோறும் தனிச் சொல் பெற்றுவரும்.

"நான்கடி யானும் நடைபெற் றடிதொறும்
தான்தனிச் சொற்கொளின் வெளிவிருத் தம்மே"

இது சிறுபான்மை மூன்றடியானும் வரும்.

"இந்தடி நான்காய் வருவது வஞ்சிய
தெஞ்சா விருத்தம் என்மனுர் புலவர்"

முச்சீரடி நான்காய் வருவது வஞ்சிவிருத்தம். இதனை வஞ்சித்துறை விருத்தம் எனறும் கூறுவர்.

ஆசிரிய விருத்தம் அகவல் விருத்தம் எனப்பெறும்.
"கழிநெடில் அடிநான் கொத்திறின் விருத்தமஃ
தழியா மரபின தகவல் ஆகும்"

கழிநெடில் அடிநான்காய்த் தம்முள் அளவெடுத்து முடியின் அஃது ஆசிரிய விருத்தமாம். அறுசீர் விருத்தம் முதல் முப்பத்திரண்டு சீர் விருத்தம் வரை ஆசிரிய விருத்தம் உண்டு. எனினும் அறுசீர் விருத்தம் முதல் எண்சீர் விருத்தம் வரையுள்ள விருத்தங்களே பெருவழக்குப் பெற்றுள்ளன. இவற்றினும் சந்த வேறுபாடுகளுண்டு.

விளம் மாமா என்ற வாய்பாட்டை அரையடியாகக் கொண்டவகை ஒன்று. இவ்வகையில் முதற்சீரிலும் நான்காஞ்சீரிலும் மோனைவருதலே சிறப்பு முதலரையடியின் முதற்சீர் போலவே அடுத்த அரையடியின் முதற்சீரும் அமைதல் வேண்டும்.

"தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கந் தாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டலை, தாமரை — கூவிளம், கூவிளம். மயில்கள் —புளிமா ஆடத்—தேமா, விளக்கம்—புளிமா, தாங்க— தேமா ஒவ்வோர் அரையடியையும் இப்படியே அலகிட்டுப் பார்க்க.

தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கந் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்க
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ''

எல்லா அடிகளும் விளம் மா மா விளம் மா மா எனவந் திருத்தலைக் காண்க. முதற்சீரிலும் நான்காஞ்சீரிலும் மோனை அமைந்திருத்தலையும் காண்க, கொண்டல்கள், மருதம்வீற் என்பவற்றில் ஒற்றை நீக்கி கொண்டகள் மருதவீற் என அலகிடல் வேண்டும்.

மாமாகாய் மாமாகாய் எனும் வாய்பாட்டால் வருவது மற்றொரு வகை அறுசீர் விருத்தம். இதிலும் முதற்சீரிலும் நான்காஞ்சீரிலும் மோனை அமைதலே சிறப்பு.

எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்

இவ்வடியில் முதலரையடியில் மாமாகாய் என வந்திருப் பது காண்க. அது போலவே அடுத்த அரையடியும் அமைந் திருத்தல் காண்க. முதலாவது சீரிலும் நான்காஞ்சீரிலும் மோனை அமைந்திருத்தலையும் காண்க. இது போலவே நான்கடியும் அமையும்.

இன்னொருவகை அறுசீர் விருந்தம் காய் காய் காய் காய் மாமா எனும் வாய்பாட்டால் வருவது. இதில் முதற் சீரிலும் ஐந்தாவது சீரிலும் மோனை வருதலே சிறப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல் இனிதாவ
தெங்கும் காணோம்

முதலாஞ் சீரிலும் ஐந்தாவதுசீரிலும் மோனை (யா, தெ) அமைந்திருத்தல் காண்க.

மேற்கண்ட மூன்றுவகை அறுசீர் விருத்தங்களே பெருவழக்குப் பெற்றவை. வேறு வகைகளும் உண்டு.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்பது ஓரடிக்கு எழுசீர்கள் கொண்டமைவது. விளம மா விளம் மா விளம் விளம் மா என அமையும் விருத்தமே பெரு வழக்குப் பெற்றது. இதில் முதற்சீரிலும் ஐந்தாஞ்சீரிலும் மோனை அமைதல்வேண்டும். அதுவே சிறப்பு.

"நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டி

இவ்வடியை அலகிட்டுப் பார்க்கவும். வேறுவகை எழுசீர் விருத்தங்களும் உண்டு.

எட்டுச்சீர்கள் கொண்ட அடி நான்கினையுடையது எண்சீர் விருத்தம். இதிலும் பலவகையுண்டு. எனினும் காய் - காய் - மா - மா என அரையடிக்கு வருதலே பெருவழக்குப் பெற்றது. இதில் முதலாஞ்சீரிலும் ஐந்தாஞ்சீரிலும் மோனை அமைதல் சிறப்பு.

"ஒருருவும் ஒருகுலமும் இல்லா என்னை
உங்கள்குலத் துள்ளோருள் ஒருவ னாக்கி"

இது காய் - காய் - மா - மா, காய் - காய் - மா - மா என அமைந்திருத்தலை அலகிட்டுக் காண்க. முதலாஞ்சீரிலும் ஐந்தாஞ்சீரிலும் மோனை வருதலையும் காண்க.

அடுத்ததாகப் பெருவழக்குப் பெற்ற எண்சீர் விருத்தம் காய் - காய் - காய் - மா என அரையடிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும் இதற்கும் முதலாஞ்சீரிலும் ஐந்தாஞ்சீரிலும் மோனை அமைதலே சிறப்பு.

"நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி
நலமொன்று மறியாத நாரியரைக் கூடி"

எல்லாவகைச்சந்தங்களையும் படித்தறிந்து அலகிட்டுப் பார்த்து வாய்பாடு கொள்தல் நலம்.

# கும்மி

கும்மி என்பது குழுமி என்பதன் மருஉ என்பர். பெண்கள் குழுமிக் கைகொட்டி ஆடும் போது பாடும் பாட்டு இது.

"கும்மி யடிதமிழ் நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மைகண் டோமின்று கும்மியடி

வெண்பாவின் இனமாகிய இக்கும்மி இயற்கும்மி ஒயிற்கும்மி என இருவகைபெறும்.

வெண்டளை பிழையாது ஓரெதுகை பெற்று எழுசீர்க் கழிநெடிலடி இரண்டு வருவது கும்மியாகும். அடியின் முதலாஞ்சீரிலும் ஐந்தாஞ்சீரிலும் மோனை வருதல் வேண்டும். ஈற்றுச்சீர் பெரும்பாலும் விளங்காய்ச் சீராகவே வரும் இவ்விலக்கணப்படி அமைவது இயற்கும்மி எனப்பெறும்.

"நல்லபண் டங்களைக் கண்டறி யோமொரு
நாளும் வயிறுற உண்டறியோம்
அல்லும் பகலும் அலைந்திடு வோம்பசி
ஆற வழியின்றி வாடிடுவோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் நாலாஞ்சீரின் முதலசையைப் பிரித்து மூன்றாஞ்சீருடன் கூட்டி அந்நாலாஞ்சீரிலுள்ள மற்ற அசையைத் தனிச்சொல்லாகக் கொள்வதுமுண்டு. அங்ஙனம் கொள்ளும்போது மூன்றாஞ்சீரிலும் ஈற்றுச்சீரிலும் இயைபுத் தொடையமையின் சிறப்பு.

"நல்லபண் டங்களைக் கண்டறியோம் — ஒரு
நாளும் வயிறார உண்டறியோம்
அல்லும் பகலும் அலைந்திடுவோம் — பசி
ஆற வழியின்றி வாடிடுவோம்.

இரண்டாவது அடியின் முதல் நான்குசீர் முடுகி வருதல் ஒயிற்கும்மி எனப்பெறும். முதல்வரி நான்கு சீர்களையும் இரண்டாவது வரி மூன்று சீர்களையும் மூன்றாவது வரியும் நான்காவது வரியும் இரண்டிரண்டு சீர்களையும் ஐந்தாவது வரி மூன்று சீர்களையும் கொண்டிருக்கும் முடுகியலடி முதலடியின் மோனையுடையதாக வரும் அம்முடுகியலின் மோனையாக அடுத்த அரையடியின் முதற்சீர் வரும். முடுகுசீர்களில் வெண்டளை வரவேண்டுமென்பதல்லை. ஐந்து வரிகளின் முதற்சீர்களும் மோனை பெறல் வேண்டும்.

"தென்பரங் குன்றினில் மேவுங் குருபர
தேசிகன் மேற்கும்மிப் பாட்டுரைக்க
சிகரத்திரு மகரக்குழை
திகழுற்றிடும் உமைபெற்றிடு
தில்லை விநாயகன் காப்பாமே"

கும்மியின் இலக்கணம் அமையப்பெற்ற எழுசீர்க் கழிநெடிலடி ஒன்றே பொருள் முற்றிவரின் அது ஓரடிக் கும்மி எனப்பெறும்.

"ஆளுடன் ஆரு முகையாம லேநீங்கள்
ஆ[illegible] தள்ளி நில்லும்"

# சிந்து

சிந்தாவது ஓரெதுகை பெற்ற ஈரடிகள் அளவொத்துவருதலாம். ஈரடியேயன்றி நான்கடிகள் ஓரெதுகையாய் வருதலும் உண்டு. ஓரடியின் மோனைத் தொடை எடுப்பின் முன்னும் பின்னும் உள்ள அரையடி இங்கு அடியெனவே வழங்கப்பெறும். இது குறளடி முதல் எல்லா அடியாலும் வரும். இதற்குத் தளைவரையறையில்லை.

"பிள்ளைக் கனியமுதே — கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே
அள்ளி அணைத்திடவே — என்முன்னே
ஆடிவருந் தேனே"

மோனைத் தொடை. எடுப்பின் முன்னும் பின்னும் உள்ள அடிகள் ஒத்துவருதல் சமனிலைச்சிந்து எனவும் ஒவ்வாது வருதல் வியனிலைச் சிந்தெனவும் பெயர் பெறும். பிள்ளைக் கனியமுதே பேசும் பொற்சித்திரமே எனும் இரண்டும் குறளடியாக வந்ததால் இது சமனிலைச் சிந்து.

"பத்தி யினாலே — இந்தப்
பாரினி லெய்திட மேன்மைகள் கேளடி"

இதில் முதலடி குறளாகவும் இரண்டாமடி அளவாகவும் இருத்தலால் இது வியனிலைச் சிந்து. முதலடியின் ஈற்றில் தனிச்சொல் பெரும்பாலும் வரும்.

சமனிலைச்சிந்து குறளடி இரண்டுவரின் இருசீரிரட்டை என்றும், சிந்தடியிரண்டு வரின் முச்சீரிரட்டை என்றும், அளவடியிரண்டுவரின் நாற்சீரிரட்டை என்றும் அவ்வச் சீர்த்தொகையாற் பெயர் பெறும்.

வியனிலைச்சிந்து குறளடியும் சிந்தடியும் வரின் இருமுச்சீரிரட்டை என்றும் சிந்தடியும் அளவடியும் வரின் முந்நாற்சீரிரட்டை என்றும் அவ்வச்சீர்த்தொகையாற் பெயர் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாதர்முடி மேலிருக்கும் நாக பாம்பே
நச்சுப்பல்லை வைத்திருக்கும் நல்ல பாம்பே
பாதலத்தில் குடிபுகும் பைகொள் பாம்பே
பாடிப்பாடி நின்றுவிளையாடு பாம்பே"

இது தனிச்சீர் பெருத நாற்சீரிரட்டை

"தின்னப் பழங்கொண்டு வருவான் — பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னையன் என்றால் — அதை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்"

இது முந்நாற்சீரிரட்டை

ஓமெனப் பெரியோர்கள் — என்றும்
ஓதுவ தாய்வினை மோதுவதாய்
தீமைகள் மாய்ப்பதுவாய் — துயர்
தீர்ப்பது வாய்நலம் வாய்ப்பதுவாய்

இது இருமுச்சீரிரட்டை

காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து, வழிநடைச்சிந்து, கிளிக்கண்ணி போன்றவை பெருவழக்குப் பெற்ற சிந்து வகையைச் சேர்ந்த இசைப்பாடல்களாம்.

## குறும்பா

நாடறிந்த நல்ல கவிஞர் மஹாகவி எனும் உருத்திரமூர்த்தி. இவர் தமிழ்க் கவிதை வளர்ச்சிக்கு புதிய உரமிட்டு வளர்த்த பெரு மகன். இவர் இயற்றிய குறும்பா தமிழுக்குப் புதிய யாப்பும் புதுப்பொருள் மரபும் அமைந்து தமிழ்க் கவிதையை வளப்படுத்தியுள்ளது.

குறும்பா ஒரே எதுகையுடைய மூன்று அடிகளைக் கொண்டது. முதலாம் அடியின் மூன்றும் ஆறும் சீர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் மூன்றும் அடியின் இறுதிச்சீரும் ஒரே இயைபு உடையவை. இந்த மூன்று அடிகளையும் ஐந்து வரிகளின் அமைத்துள்ளார். இது பின்வரும் வாய்பாட்டினுல் அமைகிறது.

காய் — காய் — தேமா
காய் — காய் — தேமா
காய் — காய்
காய் — காய்
காய் — காய் — தேமா

குறும்பா ஒவ்வொன்றும் தனிப்பாடலாகவே அமையும். தனிப் பாடல் மரபு வழிவந்த இது கதையமைப்புக் கொண்டதாகவோ ஒரு சிறு துணுக்காகவோ கூட அமையலாம். குறும்பாவின் பொருள் எதுவாகவுமிருக்கலாம். மஹாகவி அறிமுகப்படுத்திய இக் குறும்பா மூலம் தமிழ்க்கவிதையின் பார்வையும் பரப்பும் அகலிக்கின்றன.

எ — டு
உத்தேசம் வயதுபதி னேழாம்
உடலினைக்க ஆடல்பயின் ருளாம்
எத்தேசத் தெவ்வரங்கும்
ஏருளாம் ஆசிரியர்
ஒத்தாசை யாற்பயிற்சி பாழாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

1. தொல்காப்பியம்
2. யாப்பருங்கலம்
3. அவிநயம்
4. யாப்பருங்கலக்காரிகை
5. யாப்பதிகாரம் — புலவர் குழந்தை
6. கவிஞராக — அ. கி. பரந்தாமனார்
7. கவிபாடலாம் — கி. வ. ஜகந்நாதன்
8. கவிதைக்கலை — நா. பார்த்தசாரதி
9. யாப்பியல் — இராஜகோபாலாச்சாரி
10. இலக்கணத்தொகை — யாப்பு, பாட்டியல்

— டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

11. வீரசோழியம்
12. புத்துவீரியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற நூல்கள்

வெளிவந்தவை:

1. பிரிந்திடவே வேண்டுமடா 75 சதம்
2. வரலாறறியா மாமூடன் 80 சதம்
3. தூக்கியெறி பார்ப்பனீயம் 50 சதம்
4. கடற்கரையிலே 60 சதம்
5. கொக்கூர்கிழான் கவிதைகள் ரூ. 1.65 சதம்

வெளிவர விருப்பவை:

1. தென்மொழி இலக்கிய வரலாறு
2. சிங்கள இலக்கிய வரலாறு
3. பாலி இலக்கிய வரலாறு
4. வடமொழி இலக்கிய வரலாறு
5. மலையாள இலக்கிய வரலாறு
6. கிரேக்க இலக்கிய வரலாறு
7. ருஷ்ய இலக்கிய வரலாறு
8. மார்க்சீய பொருளியல்
9. அரசியல் அரிச்சுவடி
10. இலங்கை வரலாறு (ஒரு மார்க்சியக் கண்ணோட்டம்)
11. செந்நெறி செப்பிய இருவர் (மார்க்ஸ், ஏங்கெல்ஸ்)
12. செந்நெறி காட்டிய செம்மல் (லெனின்)
13. ருஷ்ய வரலாறு.
14. மார்க்சீய தத்துவம்

கிடைக்குமிடம்:

அறிவராயம்,
செய்யகம்,
கொக்குவில்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் பற்றி



பன்மொழிப் பயிற்சியும் பல்துறையறிவும் தன்னகம் கொண்ட கவிஞர் கா. வை. இரத்தினசிங்கம் அவர்கள் 1933-01-13ல் கொக்குவிலில் பிறந்தார். பைந்தமிழ் வேட்கை மிக்க இவர் கொக்குவில் கர்த்தப்பிள்ளையின் மகனும் இலுப்பைச்சடையில் ஆசிரியராக விளங்கியவருமாகிய கணபதிப்பிள்ளைச் சட்டம்பியாரின் பேரனாவார். இளமையில் ஆங்கிலக் கல்வி பெற்ற இவர் 1962ஆம் ஆண்டளவில் ஈழத்தின் புகழ்பெற்ற எழுத்தாளர் எஸ். அகஸ்தியரின் தூண்டுதலால் கவிபாடத்தொடங்கினார். பாட்டாளிப்பாவலன் என்ற புனைபெயரில் ஏறத்தாழ ஈராண்டுகளாகத் 'தேசாபிமானி'யில் அரசியற் கவிதை எழுதிவந்த இவர் அஞ்சிறைத் தும்பி எனும் புனைபெயரில் ஆங்கிலக்கவிதைகளையும் மொழிபெயர்த்துள்ளார். சிறந்த மரபுக்கவிஞரான இவர் கொச்சூர்கிழான், வடமுதுபுலவியனார், முருகீரன், செங்கீரன், நினைத்தது முடித்தான் ஆகிய புனைபெயர்களிலும் எழுதிவருகிறார். தினகரன் பத்திரிகையில் சரவைபார்ப்பவராக முப்பது ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்துவருமிவர் விறுவிறுப்பான கவிதைகள் பலவற்றை எழுதியபோதும் அடக்கமாகவே இருந்து இலக்கியப்பணி புரிந்து வருகிறார். பழகுதற்கு இனியவரான இவர் எளிய வாழ்வும் உயர்ந்த சிந்தனைகளும் ஏற்றம் தரும் என்பர். உருவத்திற் சிறியரானாலும் உள்ளத்தால் மிக உயர்ந்தவர். யாதும் ஊரே யாவருந் தோழர் எனும் பரந்த எண்ணமுடைய இவர் மிகவும் இரங்கும் தன்மையர்.

ஏ. எச். சித்தீக் காரியப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org